இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதம் இரு இதழ் — 452 ● 1994 செப்டெம்பர் 30 வெள்ளிக்கிழமை

**பகிரங்க விரிவுரை**

**பொது சன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் ஆபத்துக்கள்**

★ செப். 25 பி.ப 3 : வெலிமட சூரிய சினிமா சாலை
★ அக். 02 மு.ப 10 : பசறை நகர மண்டபம்
★ அக். 07 பி.ப 3 : சிலாபம் மல்புர சனசமூக நிலையம்
★ அக். 09 பி.ப 3 : பண்டாரவளை நகர மண்டபம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

University of Jaffna Sri Lanka RECEIVED 994-17-- Periodicals Division Library

# பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சு வார்த்தையின் பின்னணியில்

தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்படுத்திப் போகும் கூட்டு, சிங்கள — தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இராணுவ-பொலிஸ் தாக்குதலை நடாத்தும் பிற்போக்குத் திட்டத்தின் ஒரு பாகமாகும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கின்றது.

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தின் நிராயுதபாணிகளான தொழிலாளர் கூட்டத்துக்கு பொலிசாரை கொண்டு கண்ணீர் புகை தாக்குதல் நடாத்தி, துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத கயமைத்தனம் ஏற்கனவே அம்பலத்துக்கு வந்துள்ளது.

செப்டம்பர் 5ம் திகதிய இந்தப் பொலிஸ் தாக்குதல்— விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்த ஒரு சில மணித்தியாலங்களுள் இடம் பெற்றது தற்செயலானது அல்ல. சமசமாஜ—ஸ்டாலினிச தலைவர்களின் நேரடிப் பங்களிப்புடனும் நவ சமசமாஜ உட்பட்ட தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் ஆதரவுடனும் அமைக்கப்பட்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கைநீட்டி அடிப்பதற்குத் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களுடனான கூட்டு அவசியமாகி உள்ளது.

தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களுக்கு எதிராக அரச பயங்கரத்தினைக் கட்டவிழ்த்துவிட்டு, முழுத் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களையும் நசுக்கித் தள்ளும் எதிர்ப்புரட்சிப் பணியில் முன்னைய யூ. என். பீ. ஆட்சியைப் போலவே பொதுஜன முன்னணி அரசாங்கமும் முகம்கொடுத்துள்ள பாரதூரமான பிரச்சினை. அரச ஆயுதப்படைகளில் பெரும் பங்கினர் வடக்கில் இனவாத யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதேயாகும். தமிழ் மக்களின் இரத்தத்தினை உறிஞ்சிய இந்த மக்கட் படுகொலைப் படைகளை தென்மாகாணங்களுக்கு தருவித்து, தொழிலாளர், ஏழைகள், இளைஞர்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்காமல் முதலாளித்துவ ஆட்சியின் ஸ்திரப்பாட்டினை ஊர்ஜிதம் செய்யவோ அல்லது ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு அவசியமான அடிமை உழைப்பை வழங்கும் நிலைமைகளை சுருஷ்டிக்கவோ முடியாது என்பதை ஆளும் வர்க்கம் அறியும்.



சந்திரிகா குமாரதுங்க

இந்தப் பணியில்ஏற்கனவே வடக்கிலும் ஓரளவுக்கு கிழக்கிலும் தமிழ் மக்கள் மீது நானாவிதமானதும், அளப்பரியதுமான ஒடுக்குமுறைகளை திணித்துள்ள விடுதலைப் புலிகளதும்,முதலாளித்துவ கைக்கூலிப் படைகளாக தொழிற்படும் ஈ. பீ. டீ. பி, புளொட் போன்ற அமைப்புக்களதும் உதவிகளைப்பெற்றுக் கொள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## வேலைப் பகுப்புத் திட்டம்

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேர்ணல் அநுருத்த ரத்வத்த வடக்கில் நிறுத்தப்பட்டுள்ள ஆயுதப்படையினரின் முன்னிலையில் பேசுகையில் இந்த வேலைப் பகுப்புத் திட்டத்தினைப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''நாம் அடிமேல் அடிவைத்து முன்செல்வதோடு தீர்வுக்கான அறிகுறி மிகவும் நன்றாக உள்ளது. எனினும் கடந்த காலத்தில் இழைத்த எந்தவிதமான தவறையும் நாம் செய்யமாட்டோம். இல்லை. அரசாங்கத்தினால் அதிகாரம் வழங்கப்படாத எவரும் ஆயுதம் தாங்க நாம் அங்கீகாரம் வழங்கமாட்டோம். அதன் அர்த்தம் உங்களுக்கும் பொலிசுக்கும் அந்த அதிகாரம் வழங்கப்படும் என்பதாகும். அது அரசாங்கத்தின் உறுதியான தீர்மானமாகும்.''

படைகளுக்கு மத்தியில் ''உங்களுக்கும் பொலிசுக்கும் ஆயுதம் வைத்திருக்க அதிகாரம் வழங்கப்படும்'' எனக் கூறும் போது பழைய கேர்ணல் ஒரு விடயத்தை—அதாவது அது யாரின் பொலிஸ் என்பதைத் தெளிவுபடுத்தவில்லை.

ஜனாதிபதி பிரேமதாசஆட்சிக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும்இடையேயான சமரசம் தகர்ந்து போனதற்கு வடக்கு — கிழக்கில் பொலிஸ் அதிகாரங்களை பிரபாகரனின் அமைப்புக்குக் கையளிப்பது சம்பந்தமாக ஏற்பட்ட இழுபறியே காரணம் என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. அவ்வாறே அப்பேச்சுவார்த்தைகள் தகர்ந்து போனதற்கு காரணமான முதலாவது மோதுதல் இலங்கைப் பொலிசாருக்கும் அம்மாகாண மக்களுக்கும் இடையேயான போராட்டமாகத் தலை நீட்டியதும் தற்செயலானது அல்ல.



வே. பிரபாகரன்

''கடந்த காலத்தில் இழைத்த தவறை செய்யமாட்டோம்'' என ரத்வத்த வழங்கும் வாக்குறுதியில் இந்த விடயம் நிச்சயம் அடங்கியுள்ளது.

## அனைத்துலக தோற்றப்பாடு

அவ்வாறே வடக்கில் பொலிஸ் அதிகாரங்களை விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் மற்றும் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களுக்கும் வழங்கும் திட்டம் அனைத்துலக ரீதியில் ஏகாதிபத்தியவாதிகள் இப்போது ஸ்தாபிதம் செய்துவரும் பிற்போக்கு கூட்டு முறைக்குப் பெரிதும் இணங்கியது. இதைப்பற்றி கவனம் செலுத்துவது பொருத்தமானது.

இஸ்ரேலினுள் யூதர் தொழிலாளர்களைப் போலவே பாலஸ்தீன தொழிலாளர்களும் பல்வேறு போராட்டங்களுக்கும் பொது வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு கிளர்ந்தமையும், இஸ்ரேலுக்கு வெளியே அரபு பிராந்தியங்களில் யூத முதலாளிகளுக்கு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் அவசியத்தினாலும் நெரிக்கப்பட்ட சியோனிச ராபின் ஆட்சி பாலஸ்தீன விடுதலைஇயக்கத்துடன் (P.L.O) உடன்படிக்கைக்குச் சென்றதோடு அந்த உடன்படிக்கையின்படி காஸா கரையில் பீ. எல். ஓ. வுக்கு பொலிஸ் அதிகாரங்களைக் கொண்ட ஆட்சிப் பிராந்தியங்களை வழங்க முடிவு செய்தது.

இன்ரிபாடா இயக்கம் போன்ற தொழிலாளர்இளைஞர் இயக்கங்கள் வளர்ச்சி கண்டு, யசீர் அரபாத்தின் விடுதலை இயக்கம் எனப்படுவதன் முதலாளித்துவ அரசியல் ஆளுமையைச் சவாலுக்கு உள்ளாக்கியது. இதைத் தொடர்ந்துபி.எல்.ஓ. அமெரிக்க ஜனாதிபதி மாளிகையின் றோசா தோட்டத்தில் பில் கிளின்டனின் எதிரில் அடிபணியவும் இஸ்ரேல் சியோனிசத்துடன் கூட்டுக்குச் செல்லவும் முடிவு செய்தது. முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களின் அரசியல் வங்குரோத்தினையும் பிற்போக்கினையும் நன்கு சுட்டிக்காட்டிய இந்த இஸ்ரேல்—பீ. எல். ஓ. உடன்படிக்கையின் கீழ் இப்போது காஸா கரையில் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை நசுக்குவதே பீ. எல். ஓ. பொலிசாருடன் கைகோர்த்து செய்யும் இஸ்ரேல் இராணுவத்தின் ஊடாக மக்கட் படுகொலை வேலைத் திட்டத்தில்பயணம் செய்கின்றது. இன்றைய உலக நிலைமையின் கீழ் சியோனிச இஸ்ரேல் ஆட்சியாளர்களும் பீ. எல். ஓ.வும் தாம் முகம் கொடுத்துள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வைத் தேடிக்கொண்டு— பாலஸ்தீன, யூத தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை இரத்தத்தில் மூழ்கடிக்கும் கூட்டில் இறங்கியிருப்பது இந்த விதத்திலேயே.

இலங்கையில் தெற்கில் போலவே வடக்கிலும் முதலீடுகளையும் அவற்றிலான இலாபத்தையும் காக்கும் பொருட்டு ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்கள் 'அரசியல் ஸ்திரப்பாட்டை' எதிர்பார்க்கின்றன. இந்த அரசியல் ஸ்திரப்பாட்டின் அர்த்தம் என்ன? உலகின் ஏனைய இடங்களைக் காட்டிலும் குறைந்தசெலவில் உபரிப்

(8-ஆம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. ஆர். ஏ. போர் நிறுத்தத்தின் பின்னர்: தொழிலாளர் வர்க்கத்துக்கான முன்வழி

*பிரித்தானிய அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சியின் (ICP) அரசியல் குழுவின் அறிக்கை*

ஆகஸ்ட் 31 நள்ளிரவில் இருந்து ஐ. ஆர். ஏ. (ஐரிஷ் குடியரசு இராணுவம்) போர் நிறுத்தப் பிரகடனம் செய்தமை, அயர்லாந்தில் சமாதானத்துக்கான புதிய சகாப்தத்தின் ஆரம்பமாக வரவேற்கப்பட்டுள்ளது. கடந்த 25ஆண்டுகளாக 3000க்கும் அதிகமான மக்களைப் பலிகொண்ட ஈவிரக்கமற்ற குறுங்குழு கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வரும் என்ற ஆறுதல் உணர்வில் இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பின்னணியாக உள்ள நிஜ உந்து சக்திகளும் அதன் தாக்கங்களும் தமது கண்களை அடைத்துக் கொள்ள தொழிலாளர் இடமளிக்கவே கூடாது.

சின்பின்னுக்கும் (Sinn Fein) பிரித்தானிய, ஐரிஷ் அரசாங்கங்களுக்கும் இடையேயான உடன்படிக்கை காலனித்துவ மேலாதிக்கத்தில் இருந்து தம்மை விடுவிக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தினை ஒரு அங்குலம் தன்னும் முன்னேற்றாது. முழு ஐரிஷ் தொழிலாளர் வர்க்கமும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத் தாபனங்களால் (TNC) மிலேச்சமான முறையில் சுரண்டப்படுவதற்குத் தடையாக உள்ள அனைத்தையும் நீக்குவதே இதன் ஒரே இலக்கு.

போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து அடம்சின் முதலாவது கோரிக்கை, பெல்பாஸ்டின் தேசியவாதப்பகுதிகளில் தனியானதொரு, கத்தோலிக்கப் பொலிஸ் படை அமைக்கப்பட வேண்டும் என்பதே. ஏகாதிபத்தியத்தின், ஒரு பொலிஸ் ஏஜன்சி என்ற முறையில் ஐ ஆர், ஏ.யின் புதிய பாத்திரத்தினை வேறெதுவும் நன்கு தெளிவாக அம்பலமாக்காது. இதன் பணி, கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து தொழிலாளர்களை ஒரே விதத்தில் உச்சச் சுரண்டலுக்கு உள்ளாக்குவதை ஊர்ஜிதம் செய்வதே.

## பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பகற்கொள்ளை இலக்குகள்

இந்த கொடுக்கல்வாங்கல்கள், உலகப் பொருளாதாரத்தின் அடிப்படையான மாற்றங்களின் விளைவாகும்; உற்பத்தியானது பூகோளரீதியில் ஒன்றிணைக்கபட்டமை, ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களால் பொருளாதார வாழ்க்கை ஆளுமைக்குள்ளானதன் மூலம் வெளிப்பாடாகியுள்ளது. இது பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனது மேலாதிக்கத்தினை பிரிவினை பொறிமுறை, வட அயர்லாந்திலான இராணுவ ஆக்கிரமிப்புக்கள் ஊடாக பராமரிக்கும் வல்லமையை பாதித்துள்ளது.

அமெரிக்காவின் அதிகரித்த போட்டிக்கு முகம் கொடுத்த நிலையில் ஐரோப்பிய, தூர கிழக்கு நாடுகளின் கூட்டுத்தாபனங்கள் ஐரோப்பிய வர்த்தக கூட்டின் உள்ளேயான ஒரு மலிவு உழைப்பு மேடையாக ஐரிசிலிருந்து ஆதாயம் தேட முயற்சிக்கின்றன. பிரித்தானிய ஏகாதிபத்தியம் அதனது ஆட்சி வடிவங்களில் அமைப்பு ரீதியிலான பொருளாதார, அரசியல் மாற்றங்களைச் செய்யும்படி தள்ளப்பட்டுள்ளது.

போர்நிறுத்தம், ஜோன் மேயரினாலும் ஐரிஷ் பிரதமர் அல்பேட் ரினோல்டினாலும் ஜனவரியில் செய்யப்பட்ட டவுணிங் வீதி பிரகடனத்தை தொடர்ந்து வந்துள்ளது. அது 'பிரித்தானியாவுக்கு வட அயர்லாந்தில் சுயநலமான மூலோபாய அல்லது பொருளாதார நலன்கள் கிடையாது'' எனக் குறிப்பிட்டது. இது முற்றிலும் பொய்யானது. பிரித்தானிய ஆளும் வர்க்கம் அதனது ஏகாதிபத்திய அபிலாசைகளைத் துறந்துவிட்டது என்பதை இப்பிரகடனம் குறிக்கவில்லை. ஐக்கிய இராச்சியத்தின் ஒரு மாகாணம் என்ற முறையில் ஆறு கவுன்டிகளிலும் எந்த விதமான மாற்றத்துக்கும் தனது, யூனியனிஸ்ட் ரத்து

யசீர் அரபாத்



நெல்சன் மண்டேலா



ஐ. ஆர். ஏ. யின் பயணம் இப்போது நன்கு பரிச்சயமான முதலாளித்துவ தேசிய வாதிகளின் சமரசப் பாதையாகும்

அதிகார உத்கரவாதத்தின் மூலம் பிரித்தானிய ஆட்சியை வட அயர்லாந்தின் மீது பதித்திருந்தது.

தமது இந்தப் பழைய காலனியை கைவிடுவதன் அரசியல் இழப்பானது பிரித்தானிய ஆளும் வர்க்கத்தினை ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது. போட்டி ஏகாதிபத்திய சக்திகளுடனான அதிகரித்த ஆழமான போட்டியினதும் உள்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்துடனான உறவினதும் எதிரில் இது அவர்களை பலவீனம் அடையச் செய்யும்.

படைகளை வேறெங்கும் பயன்படுத்தக் கூடிய ஒரு நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பினை பராமரிப்பது உயர்ந்த செலவினைக் கொண்டதாக இருப்பினும் பிரித்தானிய ஆளும் வர்க்கம் அயர்லாந்தில் இன்னமும் முக்கிய அரசியல், பொருளாதார நலன்களைக் கொண்டுள்ளது. அவர்கள் களத்தை ஐரோப்பாவுக்கு அல்லது அமெரிக்காவுக்கு அல்லது தூர கிழக்குக்கு விட்டுக் கொடுக்க விரும்பவில்லை.

## புதிய மூலோபாயம்

பிரிவினையின் மூலம் ஒரு உற்பத்தி நிலையம் பிடுங்கப்பட்ட நிலையிலும் சுதந்திரத்துக்கு பின்வரும் கூட குடியரசு அதன் முக்கிய சந்தையும் வெளிநாட்டு முதலீட்டாளருமான பிரித்தானியாவினால் அரசியல், பொருளாதார ரீதியில் மேலாதிக்கம் செய்யப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக பிரித்தானிய மேலாதிக்கம்' தெற்கிலான வெளிநாட்டு முதலீட்டு பெருக்கெடுப்பின் மூலமும் வடக்கு உற்பத்தி தளங்களின் வீழ்ச்சியினாலும் சவால் செய்யப்பட்டது. பிரித்தானிய ஆளும் வர்க்கம், வடக்கினை ட்ரான்ஸ் நஷனல் முதலீட்டுக்கு திறந்து விடுவதன் மூலமும் தெற்கில் இந்தப்போக்கினை கட்டுப்பாட்டினுள் கொணர்வதன் மூலமும் முழுத் தீவிலும் ஒரு புதிய காலனித்துவ மேலாதிக்கத்தினை ஊர்ஜிதம் செய்ய முயற்சிக்கின்றது.

இந்தப் புதிய மூலோபாயம் பிரித்தானியாவுக்கும் அதன் சில பழைய யூனியனிஸ்ட் கூட்டாளிகளுக்கும் இடையே ஒரு பிளவினை ஏற்படுத்தி உள்ளது. வடக்கின் அரசியலமைப்பு அந்தஸ்து தொடர்பாக எதுவிதமான இரகசிய கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது என்ற ஜோன் மேஜரின் வாக்குறுதியை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து வணக்கத்துக்குரிய ஐயன் பெயிஸ்லி டவுணிங் வீதியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இதுந்த இன்டிபென்டன்ட் பத்திரிகை குறிப்பிட்ட 4 பில்லியன் ஸ்டேர்லிங் அரசாங்க மானியத்தில் வட அயர்லாந்து தங்கிவாழும் பொருட்டு உருவாக்கப்பட்ட 'தங்கி வாழும் கலாச்சாரத்தை' உடைத்தெறிவதற்கு பிரித்தானிய ஆளும் வர்க்கம் செலுத்தத் தயாராக உள்ள ஒரு விலையாகும்.

சகல யூனியனிஸ்ட் கட்சிகளும் பகட்டுடன் உத்தியோகபூர்வமற்ற UIS சமாதான தூதுக்குழுவை சந்திக்க மறுத்துவிட்ட போதிலும் உத்தியோகபூர்வமானயூனியனிஸ்ட் அதிகாரியான ஜேம்ஸ் மொலிநியூக்ஸ் கிளின்டனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அன்டனி லேக்குடனும் உப—ஜனாதிபதி அல் கோருடனும் பேச்சுவார்த்தைக்காக வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்தார். யூனியனிஸ்ட்டுகள் தங்கியிருந்த வடக்கின் பாரம்பரியக் கைத்தொழில்கள் பின்னடைந்துவிட்டன. முக்கியமான யூனியனிஸ்ட் வர்த்தக நலன்கள் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் நிலைமைகளைச் சிருஷ்டிக்க அவஸ்தைப்படுகின்றன.

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பாத்திரம்

இந்தக் கொடுக்கல்வாங்கல்களை பேரம் பேசுவதில்அமெரிக்க ஏகாதிபத்தியம் வகித்த முக்கிய பாத்திரத்தின் மூலம், இந்த நிகழ்ச்சி நிரல் சகல ஏகாதிபத்திய சக்திகளாலும் எந்தளவுக்கு பங்கிடப்பட்டுள்ளது என்பது பொதிந்து போயுள்ளது.

போர் நிறுத்த அறிவிப்பு வெளியான 48 மணித்தியாலங்களுள் நிதி உதவிகளைப் பற்றி கலந்துரையாட அயர்லாந்து வெளிநாட்டு அமைச்சர் டிக் ஸ்பிரிங்கை சந்திக்கும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் தனது விடுமுறையை முறித்துக் கொண்டார். கிளின்டன் இந்த தீர்வினை ஆதரிப்பதற்குப் பலம்வாய்ந்த உள்நாட்டுக் காரணங்கள் உள. சோமாலியா, ஹெயிட்டி, கியூபாவிலான அவரின் வெளிநாட்டுக் கொள்கைகள் விபரீதத்தில் முடிந்தன. அயர்லாந்து அவருக்கு ஒரு வெற்றிக்கான சந்தர்ப்பத்தை வழங்குவது போல் தெரிகிறது. அது அவரது சட்டத்தினை காங்கிரசில் நிறைவேற்றுவதற்கு ஐரிஷ்—அமெரிக்கன் ஆதரவை உத்தரவாதம் செய்யும்.

இந்த உடனடியான அரசியல் காரணங்களின் பின்னணியில் உலகம் பூராவும் அதன் பொருளாதார நலன்களை உத்தரவாதம் செய்யும் அமெரிக்க ஏகாதிபத்திய உந்துதல்கள் இருந்து கொண்டுள்ளன. அயர்லாந்தில் இதனை அமெரிக்காவின் நெருக்குவாரத்தின் கீழ் தச்சர் கைச்சாத்திட்ட ஆங்கிலோ — ஐரிஷ் உடன்படிக்கை வரை தேடிக் கண்டு கொள்ள முடியும். இது அனைத்துலக ஐரிஷ் நிதியை நிறுவியது. இது வருடாந்தம் 20 மில்லியன் டாலர் அமெரிக்க முதலீட்டை அயர்லாந்துக்குள் கொணர்கிறது.

ஜனாதிபதி கிளின்டனின் அந்தரங்க நண்பரான புரூஷ் மொரிசன் தலைமையிலான ஒரு உத்தியோகபற்றற்ற சமாதானத் தூதுக்குழு அமெரிக்க முதலாளித்துவத்தின் ஆழமான நலன்களைப் பிரதிபலித்தது. இது அமெரிக்க இன்சூரன்ஸ் கம்பனியின் தலைவர் வில்லியம் பிளைன், ட்ரான்நஷனல் ஜெனரால் அட்லான்டிக்கின் சார்ள்ஸ் பீனி போன்ற முன்னணி வர்த்தகப் பிரமுகர்களை உள்ளடக்கியிருந்தது.

ஒரு தீர்வுக்கு நெருக்க பிளைன் நிறுவிவரும் செல்வாக்குமிகுந்த வர்த்தகர் குழுவில் சொத்துடமை கோடீஸ்வரரான டொனால்ட் ட்ரமிப் ஒரு அங்கத்தவர். அமெரிக்க கம்பனிகள் முதலீட்டின் மீது இன்று பெறும் 24% பங்கு இலாபமும், இந்த ஏற்பாடுகளை பெல்பாஸ்டின் உள்ளும் விஸ்தரிப்பதற்குமான சாத்தியமுமே இவர்களை அயர்லாந்துக்குள் ஈர்க்கின்றது.

அமெரிக்க தொழிற்சங்க சம்மேளனமான AFL-CIOன் இரண்டு பிரதிநிதிகள் இந்தத் தூதுக் குழுவின் முக்கிய பாகமாக உள்ளனர். அவர்களின் பணி, ட்ரான்ஸ் நஷனல் முதலீட்டுக்கு அவசியமான கோர்ப்பரேட்டிஸ்ட் கொள்கைகளை அபிவிருத்தி செய்வது எப்படி என்பதையிட்டு சின்பின்னுக்கும் ஐரிஷ் முதலாளி வர்க்கத்தின் ஏனைய பகுதியினருக்கும் ஆலோசனை வழங்குவதாகும்.

அமெரிக்கா ஐரோப்பாவினுள் இந்த திடீர் ஊடுருவலை செய்யும்போது ஐரோப்பிய யூனியன் தலைவ

(9-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

கடந்த இதழின் தொடர்ச்சி

இந்த எதிர்ப்புக்கள் பெல்கிரேட் அதிகாரத்துவத்தின் மேலாதிக்க மான நடைமுறைக்கு எதிரான பொதுஜன உணர்வுகளை. குறைந்தது அரைகுறையாக வேனும் வெளிப் படுத்தின என்பதில் சந்தேகம் கிடையாது. இந்த 'குரோஷியா முதலாவது' (Croatio First) என்ற இயக்கத்தின் வேலைத்திட்டம் எவ்வாறெனினும் ஒரு முதலாளித்துவத் திட்டமாகவும் கலாச்சாரத் தேசிய-வாதத்தினதும் பொருளாதாரச் தனிச் சிறப்புவாதத்தினதும் மீதும் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. மேலும் இது ஜேர்மனியிலும் வேறு இடங்களிலும் இருந்து வந்த பழைய நாடுகடந்த உஷ்டாசே அமைப்புக்களுடன் பரந்த அளவிலான தொடர்புகளைக் கொண்டிருந்தது.

ஹோரே இந்த இயக்கத்தினைப் பாராட்டுகின்றார். குரோஷியன் ஸ்டாலினிசத் தலைவர்கள் போராட்டத்தினால் பிரிவினை உள்நாட்டு யுத்தம் வரை கொண்டு செல்லத் தவறியதற்காக மட்டுமே வருத்தம் தெரிவிக்கின்றார். அந்தக் காலப் பகுதியில் குரோஷியன் தலைவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக பொஸ்னியா-ஹேர்ஸ்கோவினாவின் பிரிவினையும் மேற்குப் பகுதியை குரோஷியாவுடன் இணைப்பதும் விளங்கியது என்பதை அவர் தனது வாசகர்களுக்குக் கூறக் கஷ்டப்பட-வில்லை. அவர்கள் அவ்வாறே குரோஷியன்கள் வாழும் வொஜ்வோடினா பிராந்தியங்களை இணைக்கவும் முயன்றனர்.

சரியாகச் சொன்னால் சேர்பியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவினையின் அச்சுறுத்தலே சுலோற்றராலு ஹோரே-யாலும் பொஸ்னியன் சுயநிர்ணயத்தினை கொலைகாரத்தனமான முறையில் மீறுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இது 'சுயநிர்ணய உரிமை"க்கான அவர்களின் ஆதரவு - பொஸ்னியா விடயத்திலும் கூட - முற்றிலும் சார்பு ரீதியானது எனக்காட்ட மட்டுமே சேவை செய்கிறது.

குரோஷியாவில் இந்த இயக்கம் நசுக்கப்பட்டுக் கட்சியினுள் இருந்த தேசியவாத மூலகங்கள் வெளியேற்றப் பட்ட நிலையிலும் டிட்டோ அதிகாரத்துவம் அதனது பல பொருளாதாரக் கோரிக்கைகளுக்கு இணங்கியது. டிட்டோவின் மரணம் இடம் பெற்ற 1980 வரையிலான ஒரு தசாப்தகாலம் யூகோசலாவிய பொருளாதாரச் சீர்குலைவின் துரித காலப்பகுதியாக விளங்கியது. 1974ல் வரையப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் குடியரசுகள் பொருளாதார தன்னாதிக்கம் கொண்டவை எனப் திட்டவட்டமாகப் பிரகடனம் செய்தேதாடு, குடியரசுகளையும் சுயாதிக்க மாகாணங்களையும் சுயாதீன அபிவிருத்திக்கு ஊக்குவித்தது.

குடியரசுகளுக்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான மூலதன, உழைப்பு பரிமாற்றங்கள் குடியரசுகளுக்கு இடையேயானவற்றைக் காட்டிலும் பரிமாணத்தில் பெரியதாய் விளங்கின. 1980பதுகளில் மிகவும் பின்தங்கிய குடியரசுகளுக்கு உதவியளிக்க செல்வமான குடியரசுகளின் மேல் விதிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிகளை விட தனிப்பட்ட குடியரசுகளுக்கு இடையே மூலதனப் பாய்ச்சல் இல்லையென்றே கூறலாம். குடியரசுகளுக்கு இடையேயான முதலீடுகளின் பெறுமதி யூகோசலா-வியாவின் முழுமையான அனைத்து மூலதன முதலீட்டின் ஒரு வீதத்துக்கும் அதிகமானது அல்ல.

ஓரளவுக்கு இக்கொள்கைகளின் பகுத்தறிவு அற்ற தன்மையானது 1970பதுகளில் டிட்டோ ஆட்சி மேற்கத்தைய நிதி மூலதனத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பிரமாண்டமான கடன்களால் மூடி ம-றைக்கப்பட்டது. லத்தீன் அமெரிக்காவைப் போல் யூகோசலாவியா மீள்சைக்கிள் சுற்றோட்ட பீட்ரோ டாலர்களைப் பெற்றுக் கொள்வதில் ஒன்றாகியது. 1980ல் டிட்டோ மரணமானதும் யூகோசலாவியா சுமார் 20 பில்லியன் டாலர் கடன் பளுவினால் நசுக்கப்பட்டது.

1980பதுகளின் நடுப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பில் 44 சதவீதம் வெளிநாட்டுக் கடன் சேவைக் கென்றே சென்றது. தொடர்ச்சியான சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு விலைவாகி உயர்வினாலும், அதிகரிக்கும் வேலையின்மையாலும் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்கள் நாசமாக்கப்பட்டன. 1986ன் கடைப்பகுதியில் பணவீக்க வீதம் 100 சதவீதத்தை எட்டியதோடு, 1.2 மில்லியன் யூகோசலாவிய தொழிலாளர்கள் வேலையற்றோர் கியூக்களில் சேர்ந்தனர்.

தொழிலாளர் வர்க்கம் ஒரு தொகை பரந்த வேலைநிறுத்தங்கள் மூலமும், எந்தவொரு தொழிலாளரின் சுயாதீனமான போராட்டத்தையும் தடைசெய்யும் அதிகாரத்துவத்தின் சட்டங்களை மீறுவதன் மூலமும் பதிலளித்தது. 1986ல் 851 வேலைநிறுத்தங்கள் இடம் பெற்றன. 1988ல் 2000 வெளிநடப்புக்கள் இடம்பெற்றன. தொழிலாளர் வர்க்கத்தின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் பெருக்கத்துக்குப் பதிலடியாக ஒவ்வொரு குடியரசுகளையும் சேர்ந்த ஆளும் ஸ்டாலினிச அதிகாரிகள் பொதுஜனங்களின் கொதிப்பை திசைதிருப்புவதற்கான வழியாக அதிகரித்த விதத்தில் தேசிய சோவினிசத்தின் பக்கம் திரும்பினர்.

யூகோசலாவிய வரலாறு பற்றிய எந்தவொரு ஆழமான ஆய்வும் இன்றைய காலப்பகுதியின் தேசிய வாதத்தின் வெடிப்பு பழமைவாய்ந்த குரோஷிய, சுலோவீனிய, முஸ்லீம் அல்லது மசிடோனியன் சுயநிர்ணயத்துக்கான போட்டியின் தவிர்க்கமுடியாத வெளிப்பாடாக அன்றி நான்கு தசாப்தங்களுக்கு மேலாக டிட்டோவினாலும் அவரது வாரிசுகளாலும் கடைப் பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் திட்டவட்டமான வெளிப்பாடு என்பதைக் காட்டுகின்றது.

## 12. சோசலிசம் காட்டிக் கொடுக்கப்பட்டது: தொழிலாளர் புரட்சிக் கட்சியின் நிலைப்பாட்டின் விளைவுகள்

பொஸ்னியாவின் சுயநிர்ணயம் பற்றிய தொ.பு.க.வின் கருத்துப்பாடு முற்றிலும் ஜனநாயக் விரோதமானதும் முதலாளி-த்துவப் பண்பு கொண்டது மாகும் எனக் கூறவேண்டும். தொ.பு.க. சஞ்சிகையான 'த இன்டர்நஷனலில்' வெளியான ஹோரே/சுலோட்டர் கட்டுரை கூறுவதாவது; "முன்னைய யூகோசலாவிய குடியரசு-களுக்கும் மாகாணங்களுக்குமான சுயநிர்ணய உரிமையை அவற்றின் இன்றைய சட்டரீதியான எல்லைகளுக்குள்ளே மட்டுமே அங்கீகரிக்க முடியும்... சேர்பிய, குரோஷிய பெரும்பான்மைப் பிராந்தியமான பொஸ்னியாவுக்கு அல்லது குரோஷிய கரஜிவோ பிராாந்தியம் போன்ற சிறிய பிராந்திய அலகுகளுக்கு சுயநிர்ணய உரிமை வழங்க முயற்சிப்பது இனக் குழு ஆதரவுவழங்க இட்டுச் செல்கின்றது.

சோசலிஸ்டுகளைப் பொறுத்தமட்டில் சுயநிர்ணயம் என்பது தேசிய சிறுபான்மையினரை ஒரு குறிக்கப்பட்ட அரசின் எல்லைக்குள் அடங்கிக் கிடக்க நெருக்கும் அரச பலாத்காரத்தின் பயன்பாட்டுக்கு எதிரான எதிர்ப்பேயன்றி வேறெதனையும் கருதவில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இது முன்வைக்கப்பட்ட சமயத்தில் இதுவே இதன் அத்தியாவசியமான ஜனநாயக உள்ளடக்கமாக இருந்ததோடு இன்றும் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

சரியாக இதையே தொழிலாளர் புரட்சிக் கட்சி நிராகரிக்கின்றது. ஹோரே/சுலோற்றர் தமக்கு பொஸ்னியா, குரோஷியா அல்லது உண்மையில் சேர்பியாவினுள் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகளையிட்டு அக்கறை கிடையாது எனப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்கின்றனர். பொஸ்னியாவில் சேர்பியர்கள் படுகொலை செய்யப்படுவதை இவர்கள். 'உள்ளூர் இராணுவத்தின்' 'சிறிய அளவிலான அட்டூழியங்கள் 'எனத் தள்ளுபடி செய்கின்றனர்.

இந்தக் குடியரசுகளுக்கு இடையே நிர்மாணிக்கப்பட்ட சட்டரீதியான எல்லைகள் யூகோசலாவியா ஒரு ஒன்றிணைக்கப்பட்ட சமஷ்டியாக இருந்த நிலைமைகளின் கீழ் வரையப்பட்டவை. சுலோவீனியா, குரோஷிய சுதந்திரப் பிரகடனத்துடனும் பின்னர் பொஸ்னிய சுதந்திரப் பிரகடனத்துடனும் பெருமளவிலான சிறுபான்மையினர் தாம் திடீரென அந்நியமான அரசுகளில் வாழ நேரிட்டுள்ளதைக் கண்டனர்.

பொதுவில் பிரிவினைவாதமும் சிறப்பாக சேர்பிய, குரோஷியன் சோவினிசமும் கட்டவிழ்க்கப்பட்டது தான் தாமதம் பழைய குடியரசு எல்லைகள் தொடர்ச்சியான பிரதிபலன்களை உள்ளடக்கிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படவில்லை. இந்த எல்லைகளை பிரிவினையின் அடிப்ப-டையிலான 'சுயநிர்ணய' கருத்துப்பாட்டுடன் ஒருமைப்படுத்த முடியும் என்ற கருத்து சிரிப்புக்கிடமானது.

கொசோவா மாகாணத்திலும் புதிதாகச் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட மசிடோனியாவிலும் உள்ள அல்பேனிய மக்களின் நிலை என்ன? இருவரும் பிரிவினைக்கும், 'சுயநிர்ணயத்துக்கும்' விருப்பம் ரிவித்துள்ளனர்.

தொழிலாளர் புரட்சிக் கட்சி கொசோவா யூகோசலாவியாவின் தனியொரு நிர்வாக அலகாக அங்கீகரிக்கப்பட்டது என்ற அடிப்படையில் சுயநிர்ணயத்துக்கு ஆதரவும் 'ஒடுக்குவோன்' சேர்பியாவுக்கு எதிர்ப்பும், 'சட்டரீதிதியான எல்லைகளை' மீறுவது 'இனக்குழு பிரிவினை'யையும், 'சட்டரீதியான எல்லைகளை' மீறுவதையும், 'ஒடுக்கப்பட்ட' மசிடோனியாவின் "சுயநிர்ணயத்துக்கான" உரிமை மீது ஆக்கிரமிப்பதையும் இது பிரதிநிதித்துவம் செய்யும் என்ற அடிப்படையிஸ் இதனை மேற்கு மசிடோனியாவுக்கு நிராகரிக்குமா?

தொ.பு.க.வின் நிலைப்பாடு தெரிய வில்லை. இது முன்னைய யூகோச-லாவியாவின் ஏனைய பாகங்களில் இடம்பெற்று வரும் அபிவிருத்தி-யையிட்டேனும் - குறைந்த பட்சம் உலகின் ஏனைய பகுதியினருக்காகவேனும் - தனது பொஸ்னியன் கொள்கையின் தாக்கங்களைக் கணக்கில் எடுக்கத் தன்னும் அக்கறை கொள்ளவில்லை. இந்த விவகாரங்களின் மீது உள்நாட்டு யுத்தம் வெடிப்பின் இதன் பெறுபேறாக உருவாகும் மனிதப்படுகொ-லைகளால் எல்லைகளின் சட்ட ரீதியான தன்மைபற்றிய சிறப்பு வேறுபாடு இல்லாது போகும்.

பால்கன் பிரச்சினையின் இந்த அம்சம - பல்வேறுபட்ட தேசிய இனங்கள் ஒரே சிறிய பிராந்தியத்தினை பங்கிட்டுக் கொண்டுள்ளமை - பால்கன் சோசலிஸ்ட் சமஷ்டிக்கான கோரிக்கையை வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான் பிரச்சினையா-க்கியுள்ளன. எவ்வாறெனினும் ஹோரே/சுலோற்றர் இந்தக் கோரிக்கையை என்னதான் 'மானசீகமான' தாகக் கொள்ளினும் பிராந்தியத்தினுள் தொடர்ச்சியான இரத்தக்களரியில் இருந்து தலையெடுப் பதற்கான மார்க்கமாக இது உள்ளது.

ஹோரேயும் சுலோற்றரும் யூகோசலா-வியாவின் நவீன வரலாற்றை நாட்டைக் கலைத்துவிடுவதை நோக்கிய ஒரு

4ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

*3ம் பக்கத் தொடர்ச்சி*

முற்போக்குப் பயணமாக முன்வைக்கின்றனர். இந்தப் போக்கு "1989-91 புரட்சியில்" உச்சக் கட்டத்தை அடைந்ததாகவும் "இதன் தேட்டங்கள் மிலோசேவிக்கின் எதிர்ப் புரட்சியினால் பெருமளவு அழிக்கப்படாது இருந்திருக்குமாயின் இது முதலாளித்துவ ஜனநாயகத்தை நவீனமயமாக்குவதன் கீழ் ஒரு கூட்டையோ அல்லது சுதந்திர தேசிய அரசுகளின் பொதுநலவாயத்தையோ சிருஷ்டித்து இருக்கும்" என அவர்கள் குறிப்பிடுகின்றனர். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இவர்கள் இந்தப் போக்கினை ஒரு "தேசிய-ஜனநாயகப் புரட்சி" எனக் குறிப்பிடுகின்றனர்.

யூகோசலாவிய சம்பவங்கள் பற்றிய இந்தப் பிற்போக்கு தேசியவாத விவரணங்களின் உள்ளே சோசலிசப் புரட்சியை அடியோடு நிராகரிக்கும் உலக வரலாற்றுக் கண்ணோட்டம் உள்ளடங்கியுள்ளது. இது வெறுமனே அட்டிலா ஹோரே கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்திலான தமது ஆய்வுகள் ஊடாக அபிவிருத்தி செய்து கொண்ட ஒரு வெறும் கருத்து அல்ல. இது ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சியை சோசலிச முன்நோக்கின் தோல்வியின் நிருபணமாக நோக்கிய ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள், குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளின் முழு அனைத்துலக தட்டினரதும் கண்ணோட்டமாகும்.

ஹோரே தொ.பு.க. பத்திரிகையில் யூகோசலாவிய தேசிய இனப் பிரச்சினையுடன் நேரடியாகத் தொடர்புபடாத எந்தவொரு பிரச்சினை பற்றியும் இன்னமும் கருத்து வெளியிடவில்லை. திட்டவட்டமாகச் சொன்னால் இது அவரின் அரசியல் அக்கறைக்குரிய விடயங்களின் கூட்டு மொத்தமாகும்.

எவ்வாறெனினும் கிளிப் சுலோற்றர் நான்காம் அகிலத்தை மறுநிர்மாணம் செய்வதில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக் கொள்கிறார். அவர் ஒரு ட்ரொட்ஸ்கிஸ்டாக வேஷம் போட தொடர்ந்து முயற்சிக்கின்றார். இருப்பினும் யூகோசலாவியா பற்றிய இந்த ஆய்வு உலக முன்நோக்கு சம்பந்தமாக எத்தகைய தாக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை கூறுவதற்கு அவர் ஒரு போதும் அக்கறை காட்டவில்லை. இப்போது ஹோரே இதனை அவருக்காகச் செய்துள்ளார்.

யூகோசலாவியச் சம்பவங்கள் "தேசிய ஜனநாயகப் புரட்சி" கருச்சிதைவு செய்யப்படுவதையும் "நவீனமயமான முதலாளித்துவ ஜனநாயகங்களால்" ஆளப்படும் ஒரு சுதந்திர அரசுகள் குழுவின் நிர்மாணத்தையும் பிரதிநிதித்துவம் செய்யுமானால் பால்கன் குடாநாட்டில் மட்டுமல்ல ஏனைய இடங்களிலும் முதலாளித்துவம் ஒரு முற்போக்குப் பாத்திரத்தினை இன்னமும் வகிக்க வேண்டியுள்ளது என்பது துலாம்பரமாகின்றது.

எவ்வாறிருப்பினும் "1989-91 புரட்சி" பால்கனுக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. இது ஒரு பொது வலதுசாரிப் போக்கின் ஒரு பாகமாக இருந்ததோடு கிழக்கு ஐரோப்பா பூராவும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வீழ்ச்சியையும் முதலாளித்துவ ஆட்சிகளின் எழுச்சியையும் கண்டதோடு சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் உச்சக் கட்டத்தை அடைந்தது.

இந்த நிகழ்வுகள் பற்றி ஹோரே/சுலோற்றரினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொ.பு.க.வின் இன்றைய பரிணாமத்தினைப் புரிந்துகொள்வதற்கு திறவுகாலாம். இந்நாடுகளில் முதலாளித்துவத்தைப் புனருத்தாரணம் செய்தமை நீண்டுவந்த ஸ்டாலினிச எதிர்ப் புரட்சியின் உச்சக் கட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்வதாக அல்லாமல் ஒரு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை யதார்த்தமாக்குவதாக உள்ளது என இவர்கள் பிரகடனம் செய்கிறார்கள்.

இந்த முன்நோக்கின் அடிப்படையில் சோவியத் யூனியனின் சிதைவும் பால்டிக் பிராந்தியத்தில் இருந்து காக்கசஸ் வரை சுதந்திர முதலாளித்துவ புனருத்தாரண ஆட்சிகளின் தோற்றமும் 1917 அக்டோபர் புரட்சியின் மூலம் கருச்சிதையச் செய்யப்பட்ட "தேசிய-ஜனநாயக பணியினை" யதார்த்த மாக்குவதாக நோக்கப்பட வேண்டும்.

"1989-91 புரட்சி" பற்றிய ஹோரேயின் ஆய்வுகளை ஏற்றுக் கொள்வதற்கு ஒருவர் போல்ஷிவிக் புரட்சி ஒரு இராட்சத வரலாற்றுத் தப்பு எனவும் அதை வழிநடாத்திய கோட்பாடான ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி பிழையானதாகும் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

முன்னைய சோவியத் யூனியன் பற்றிய தொ.பு.க.வின் நிலைப்பாட்டை நிச்சயப்படுத்திக் கொள்ள யூகோசலாவியாவின் உள்நாட்டு யுத்தம் பற்றிய அதன் நிலைப்பாட்டை மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் செய்ய வேண்டியது எல்லாம் சுலோற்றரின் 'வேர்க்கர்ஸ் இன்டர்நஷனல்' உடன் இணைந்து கொண்ட 'சோசலிஸ்ட் வேர்க்ர்ஸ்' யூனியனின் கருத்துக்களை ஆய்வு செய்வதே.

இந்த அமைப்பு சோவியத் பாட்டாளி வர்க்கம் ஒரு சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் போராட இலாயக் கற்றது என வாதிடுவதன் மூலம் தனிச்சிறப்புப் பெற்றது. அத்தோடு சோவியத் யூனியனின் வீழ்ச்சியைச் சூழவுள்ள காலப்பகுதியில் அரசின் பண்பு, சொத்து உறவுகளின் தன்மை அல்லது தொழிலாளர் வர்க்கத்தின் சமூக அந்தஸ்தில் எந்தவிதமான அடிப்படை மாற்றமும் இருந்தது கிடையாது என வலியுறுத்துகின்றது.

1993ன் இலையுதிர் காலத்தில் குசேவ் அனைத்துலக குழுவின் ஒரு சோவியத் ஆதரவாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தமது கருத்துக்களைக் குறிப்பிட்டார்: "ஒருவர் வெகுஜன கிளர்ச்சிகளுக்காக பந்தயம் பிடிப்பது அர்த்தமற்றதும் உதவாக்கரையானதும் என்பதில் இருந்தே ஆரம்பிக்கின்றோம். நிஜ பிரச்சினை இருப்பது தொழிலாளர் வர்க்கத்துக்கு புரட்சித் தலைமை இல்லாததனுள் அல்ல. தொழிலாளர்கள் இப்போது பெருமளவுக்கு எமது பிரச்சாரங்களை இன்னமும் ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் இல்லாததால் அது வெறுமனே காலத்தையும் சக்தியையும் வீணாக்குவதாகும். வேறு வார்த்தையில் சொன்னால் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு நெருக்கடி என்ற விதத்தில் அந்தளவுக்கு ஒரு 'புரட்சிகரத் தலைமை நெருக்கடி' இல்லை. தரப்பட்டுள்ள நெருக்கடியானது அதிகாரத்துவத்தின் சர்வாதிகாரக் காலப்பகுதியின் போது தொழிலாளர் வர்க்கத்தினை அணுவளவுக்கு சிதறடித்ததன் மூலமும் ஒரு வர்க்கம் என்ற முறையில் அதனை அழித்ததன் மூலமும் தொடர்ந்து வர்க்க நனவினை நாசமாக்கியதனதும் தவிர்க்க முடியாத பெறுபேறாகும்."

குசேவ் என்ன சொல்கிறார் என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள். தொழிலாளர் வர்க்கம் 'அழிக்கப்பட்டுவிட்டது', 'அணுவளவுக்கு சிதறடிக்கப்பட்டுவிட்டது' சோசலிசக் கொள்கைகளுக்கு கவனம் செலுத்த அதற்கு 'நிலைமை இல்லை'. இவை பழக்கப்பட்டவை போல் ஒலிக்கின்றதா? ஹோரே/சுலோற்றர் யூகோசலாவியாவைப் பொறுத்தமட்டில் கிட்டத்தட்ட ஒற்றுமையான ஒரு முன்நோக்கினை முன்வைக்கின்றனர் பொஸ்னியாவினுள் "தொழிலாளர் வர்க்கம் எஞ்சியில்லை எனலாம்" யூகோசலாவியாவின் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்கு அழைப்பு விடுப்பது அவநம்பிக்கைக்கிடமான "மானசீகமானதும்" "நிஜ போராட்டத்துடன்" எதுவித உறவும் இல்லாததுமாகும்.

தொழிலாளர் வர்க்கம் அழிக்கப்பட்டு, தொடர்ந்து ஒரு புறநிலையான புரட்சிகர வர்க்கமாக இல்லாது போகின் அப்போது சமூக மாற்றத்துக்கான பயணத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் ஒரு கட்சி ஏனைய வர்க்க சக்திகளுக்கும் ஏனைய வேலைத் திட்டங்களுக்கும் திரும்பியாக வேண்டும் என்பது தெளிவு. யூகோசலாவியாவில் இது இனக்குழு அடிப்படையிலான ஆட்சிகளுக்கும் இராணுவத் தலையீட்டுக்குமான ஆதரவைக் குறிப்பின் முன்னைய சோவியத் யூனியனுள்ளும் அது அவ்வாறு இல்லையா?

ஏகாதிபத்தியவாதிகள் தேசியவாத மோதுதல்களை சுரண்டிக் கொள்ளவும் முன்னைய சோவியத் யூனியனில் முதலாளித்துவப் புனருத்தாரணத்தினை மேலும் முன்னெடுக்க இராணுவத் தலையீடுகளை நடாத்துவதையும் நோக்கி தவிர்க்கமுடியா வண்ணம் முன்செல்வர். யூகோசலாவியாவில் போன்று சுலோற்றரின் தொ.பு.க. இந்த எதிர்ப்புரட்சி முயற்சிகளை மேலும் முன்னெடுக்கும் பொருட்டு ஐ.நா.வுடனும் நேட்டோவுடனும் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங் களுடனும் சேர்ந்து அது தொழிற்படு வதைக் காண முடியும் என ஒருவர் தீர்க்கதரிசனமாகக் கூறி வைக்க முடியும்.

ஹோரே கம்யூனிஸ்ட் விரோத கூச்சல் எழுப்பியவாறு பழைய யூகோசலாவியாவினுள் முதலாளித்துவத்தினதும் தேசியவாதத்தினதும் விடுதலைப் பாத்திரத்தினைப் பிரகடனம் செய்த வண்ணம் தனது ஆய்வினை நிறைவு செய்கின்றார். "ரிபப்லிகன் அரசாங்கங்களை 'முதலாளித்துவ புனருத்தாரணம்' எனக் கண்டனம் செய்வது அர்த்தமற்றது எனக் குறிப்பிடும் ஹோரே இங்ஙனம் எழுதுகின்றார்: "1950 பதுகளில் இருந்து ஆளும் யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சி அதிகரித்த விதத்தில் பொருளாதாரத்தில் அரச கட்டுப்பாட்டைக் கைவிட்டதோடு 'சந்தை சோசலிசம்' முறையை அபிவிருத்தி செய்தது... இதனை சேர்பியன் ஆளுமைக்கு உட்பட்ட யூகோசலாவிய அரசினால் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் உறுதியான மீட்சிக்கான ஒரு அபிவிருத்தியாகக் கொள்ளாமல் அவர்கள் இதனை ஒரு 'உருக்குலைந்த தொழிலாளர் அரசின்...' பாதகமான வெடிப்பாகக் காண்கின்றனர். இந்த தோழர்களின் மாறாநிலைவாத, காலவதியான கோட்பாட்டு நோக்குகள் அவர்களை யூகோசலாவியாவின் தேசிய விடுதலைக்கான சக்திகளிடமிருந்து பழைய ஸ்டாலினிச அமைப்பை நோக்கி இட்டுச் செல்கின்றது.

இந்த அசிங்கங்களைப் பிரசுரிப்பதன் மூலம் சுலோற்றர் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அரசியல், அடிமுதல் தலைவரை முதலாளித்துவமயமானது என்பதை நிரூபித்துள்ளார். அது மார்க்சிசத்திலிருந்து அவரின் 'உறுதியான விடுதலை'யையும் ஒரு பாட்டாளிவர்க்க கொள்கையை தாம் அடிப்படையாகக் கொண்டவர் என்ற நடிப்பின் உச்சக் கட்டத்தையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

பால்கன் நெருக்கடிக்கான ஒரு தொழிலாளர் வர்க்கத் தீர்வின் சாத்தியத்தினை நிராகரித்துவிட்டு தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முழு முன்நோக்கும் சேர்பியர்களுக்கு எதிரான பொஸ்னியன், குரோஷிய தேசியவாதிகளின் ஒரு இராணுவ வெற்றிக்கு ஆதரவளிப்பதிலேயே வேக்காடாகியுள்ளது.

### 13. 'வடதிசை பாதை'க்கான தொ.பு.க. பிரச்சாரம்

ஹோரே/சுலோற்றரினால் விளக்கப்பட்ட கோட்பாட்டு நிலைப்பாடுகளின் கீழ் தொ.பு.க.வின் நடைமுறை அரசியல் பால்கனில் ஏகாதிபத்தியவாதிகளின் இலக்குகளுடன் நேரடியாக ஒருமித்துப் பயனம் செய்வது தவிர்க்க முடியாதது. தொழிலாளர் உதவி என்ற போலி மனிதாபிமான முகமூடிகளின் கீழ் பிரித்தானிய தொ.பு.க. முன்னைய யூகோசலாவியாவில் ஏகாதிபத்தியவாதிகளின் நடவடிக்கைகளுக்கு இராணுவ உதவிகளை வழங்குகின்றது.

தொ.பு.க.வின் வாகன ஊர்வலம் உணவு, மருந்துகளை வெறுமனே அடையாளமாக விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கவில்லை என்பது நன்கு தெரிந்ததே. 'தொழிலாளர் உதவி' பொஸ்னியாவுக்குள் இஸட்பெகோவிக் ஆட்சியினதும் அதன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களதும் பாவனைக்காக செய்மதித் தொலைத் தொடர்புச் சாதனங்களையும், மற்றும் இராணுவக் கருவிகளையும் கொணர்வதில் ஈடுபட்டிருந்தது. இதன் ட்ரக்குகள் ஐரோப்பிய ஆயுத வர்த்தகர்களாலும் மற்றும் தனியாட்களாலும் செலுத்தப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன.

தம்மை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக் கொள்ளும் ஒரு இயக்கம் முதலாளித்துவச் சக்திகளுக்காக இரகசியமாக துப்பாக்கி போக்குவரத்தில் ஈடுபட்ட-வரலாற்றில் முதல் சம்பவம் இதுவே.

இதே சமயம் தொ.பு.க. தொழிலாளர் உதவியை இப்பிராந்தியத்தில் நேரடியான இராணுவ ஆத்திரமூட்டல் களைத் துண்டிவிடப் பயன் படுத்துகின்றது. கடந்த அக்டோபரில் இந்த வாகன ஊர்வலம் யூகோசலாவியாவை வந்தடைந்ததும் இது டுஸ்லாவுக்கு குரோஷியன் கடற்கரை நகரமான ஸ்பிளிட்டுக்குச் சென்று, பின்னர் மத்திய பொஸ்னியா ஊடாகச் செல்ல வேண்டும் என்ற ஐ.நா. சிபார்சை தொ.பு.க. நிராகரித்தது. தொ.பு.கட்சி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் படையின் இராணுவப் படைப் பிரிவின் (UNPROFOR) பிரிகேடியர் ஜெனரால் ஜெகான் செக்கால்டியுடன் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்ததோடு இது பசோவினா கொரிடோர் வழியாக 'வடதிசை பாதை' (Northern route) யில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரியது.

இந்தப் பாதை பற்றிய தொ.பு.க.வின் வலியுறுத்தல் அசாதாரணமான முறையில் கடுமையானதாயும் முதல் பார்வையில் விவாரிக்க முடியாததாயும் உள்ளது. தொ.பு.க. பிரச்சாரத்தின் மத்திய சுலோகம் 'வடதி[illegible]பாதையை திற' என்பதாக மாறியதோடு இரண்டாவது வாகன ஊர்வலம் இத்தகைய ஒரு ஆத்திரமூட்டும் பதாகையின் கீழேயே இடம்பெற்றது. பிரச்சாரத்தில் இடம்பெற்ற இந்த விசித்திரமான திருப்பத்துக்கு டுஸ்லாவுக்கு ஊடாக உதவியை கொண்டு செல்கையில் முகம் கொடுக்கும் இராணுவ ரீதியான பிரச்சினைகளுடன் எதுவிதமான தொடர்பும் கிடையாது. 'சோசலிஸ்ட் அவுட்லுக்' குழுவினால் வழிநடாத்தப்பட்ட அந்த உதவி வாகன ஊர்வலத்தில் ஒரு பகுதி ஐக்கிய நாடுகளின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதால் அது பயணம் செய்வதில் பிரச்சினை தோன்றவில்லை.

"வடதிசை பாதையை" திறக்கும் கோரிக்[illegible]யினை தூண்டுபவர்களாக விளங்[illegible]வர்கள் குரோஷியன், பொஸ்னியன் அரசாங்கங்கள் அன்றி வேறுயாரும் அல்லர். மான்செஸ்டரில் நடைபெற்ற திரும்பி அறிக்கை சமர்பிக்கும் கூட்டத்தில் (Workers Press, 1993 நவம்பர் 3) வாகன ஊர்வலத்தின் தலைவி டொட் கிப்சன் குரோஷியன் யூனியனின் இரண்டு அங்கத்தவர் களான ஜஸ்னா பெட்ரோவிக், மோரியோ உகேலினியை பாரா-ட்டினார். "அவர்கள் குரோஷியன் வெளிநாட்டு அமைச்சினதும் பொஸ்னிய ஹேர்ஸ்கோவினா அரசாங்கத்தினதும் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு எமக்கு உதவினார்கள். அங்கு நாம் உதவிப் பாதையைத் திறப்பது பற்றிக் கலந்துரை-யாடினோம்.

"எமது வாகன ஊர்வலம் டுஸ்லாவுக்கு செல்வதற்கு இருசாராகிரினதும் உதவியைப் பெற்றோம். குரோஷியாவுக்கு வெளியே பயணம் செய்து, வடதிசை கொரிடோர் ஊடாக டுஸ்லா செல்லும் பொருட்டு நாம் சக்ரெப்பில் இருந்து சுவான்சாவுக்கு செல்ல வேண்டும் என குரோஷியன் வெளிநாட்டு அமைச்சின் சொமென்கா செக் பிரேரித்தார்."

தொ.பு.க. வடதிசை கொரிடோர் ஊடாக அனுப்புவதற்கு முயற்சிக்கையில் அவ்விரு ஆட்சியாளரதும் உள்நோக்கத்தை விளக்க கிப்சன் முயன்றார். அந்தப் பாதை பொஸ்னியன் சேர்பியர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர்கள் அதில் 8-15 கிலோமீட்டர் தூரத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாயும் இதனை தமது பிரதான விநியோகப் பாதையாக பயன்படுத்துவதாயும் அவர் விளக்கினார். "இந்த வடதிசை கொரிடோர் முழு யுத்தத்துக்கும் திறவு கோலாகக் கொள்ளப்ப-டுகின்றது. இது பொஸ்னியா-வினதும் ஹேர்ஸ்கோவினாவினதும் பிளவைக் குறிக்கிறது."

இந்த பசோவினா கொரிடோர் சேர்பியர்களால் ஆக்கிர-மிக்கப்பட்டுள்ள மத்திய பொஸ்னியாவுக்கும் குரோஷியா உள்ளேயான சேர்பியன் பிராந்திய மான கிரஜினாவுக்கும் இடையேயான தொடுவையாக உள்ளது. இது ஐ.நா. இராணுவ பலத்தினால் மட்டுமே திறக்கப்பட முடியும். இந்தப் பாதைக்கான பொஸ்னியன், குரோஷியன் அரசாங்கங்களின் ஆதரவு, சேர்பியாவுக்கு எதிராக மேற்கத்தைய இராணுவத் தலையீட்டை தூண்டிவிடுவதையே ஒரே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன்மூலம் தொழிலாளர் புரட்சிக் கட்சி தனது அரசியல் போக்கினை தர்க்கரீதியான அதன் இறுதி முடிவுக்கு இட்டுச் சென்று கொண்டிருந்தது. அதாவது குரோஷியன் பொஸ்னியன் பிற்போக்காளர்களின் யுத்தத் திட்டங்களில் பங்கு கொள்வது. இவர்களின் 'வடதிசை பாதை' உண்மையில் பொஸ்னிய, குரோஷியன் ஆளும் கும்பல்களின் - திட்டவட்டமான ஏகாதிபத்திய உதவியுடன் - சேர்பியாவுக்கு எதிராக திறக்க முயற்சிக்கும் வடமுனைக்கான ஒரு மூடுதிரை மட்டுமே.

இம்முன்நோக்கு ஏகாதிப-த்தியவாதிகளின் தலையீட்டினை வெறிகொண்டு பிரேரிப்பவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக லிபரல் ஜனநாயகத் தலைவரும் மாஜி SAS அதிகாரியுமான (பிரித்தானிய விசேட படைகள்) படி ஆஸ்டன் 1994 பெப்ரவரி 6ம் திகதிய ஒப்சேவர் பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்: "சரஜீவோவின் பயங்கரத்துக்கு காட்டும்: அக்கறை. முதலில் டுஸ்லாவினுள் தோன்ற வேண்டும்... டுஸ்லாவை திறப்பது சேர்பியர்களும் குரோஷியர்களும் முழு மத்திய பொஸ்னியாவையும் சுற்றிப் போட்டுள்ள 'சீலை' உடைக்கும்... நிஜ பலாத்காரத்தைப் பயன்படுத்தும் மிரட்டலின் மூலம் வாகன ஊர்வலத்துக்கு ஆதரவளிக்க வேண்டியதோடு தாக்குதல்களை தவிர்க்க வேண்டும். உதவிகளை விநியோகிப்பதற்கு எதிரான சகல தடைகளுக்கும் எதிர்ப்புக் காட்ட வேண்டும், 'சோசலிஸ்ட் அவுட்லுக்' குழு தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஆத்திரமூட்டல்களில் இருந்து பிரிந்ததைத் தொடர்ந்து ஹோரே/ சுலோட்டர் அந்த அமைப்பின் தலைவர் அலன் தோனட்டுக்கு எதிரான கடும் பழி சுமத்தும் தாக்குதலை வரைந்து கொண்டனர். இந்தப் பத்திரம் தொ.பு.க.வின் ஏகாதிபத்திய ஆதரவு அரசியலின் ஒழுக்கக் கேட்டினை வெளிப்படுத்துகின்றது.

அவர்கள் பிரகடனம் செய்ததாவது: "வடதிசை பாதையை ஐ.நா. திறக்க வேண்டும் எனக் கோருகையில் நாம் சக்திவாய்ந்த முறையில் டுஸ்லாவை சூழவுள்ள மேற்கத்தைய தடையை ஒரு முடிவுக்குக் கொணர வேண்டும் எனக் கோருகின்றோம். இங்கு அவர்களின் செட்னிக் சகாக்கள் சிலர் கொலை செய்யப்படின் அது ஓரளவுக்கு நல்லது." இது தமது குண்டுவீச்சு மிரட்டலை ஸ்திரப்படுத்தும்படி நேட்டோவுக்கு விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோ யேளன்றி வேறொன்றும் அல்ல.

1994 ஜனவரி 15ம் திகதிய வெளியீட்டில் 'வேர்க்கர்ஸ் பிரஸ்' 'ஏகாதிபத்தியம் பொஸ்னியாவில் இருந்து வெளியேறு' என்ற தலைப்பிலான ஒரு ஆசிரியத் தலையங்கத்தைப் பிரசுரித்தது. இந்த வேஷதாரிக் கோலம் நேட்டோ விமானத் தாக்குதல்கள் இடம்பெற இருந்த தருணத்தில் தொ.பு.க.வின் பயணத்தி-சையை மூடிமறைக்கவே இடம் பெற்றது. இதே பத்திரிகை வெளியிட்ட டொட் கிப்சனின் ஒரு கடிதம் தொ.பு.க.வின் நிச பயணத் திசையைச் சுட்டிக்காட்டியது.

ஜனவரி 10ம் திகதியிடப்பட்ட கிப்சனின் கடிதம் குரோஷியன் பாதுகாப்பு அமைச்சர் கொஜ்கோ சுசக்குக்கு விலாசமிடப்பட்டிருந்தது. "ஒராஸ்ஜேயில் இருந்து டுஸ்லா வரையிலான வடதிசை பாதையில் தடையை அகற்றும் பொருட்டு நீங்கள் ஒழுங்கு செய்ய வேண்டும் எனக் கோரவே இதனை நாம் எழுதுகின்றோம்" எனக் குறிப்பிடும் இக்கடிதம் இங்ஙனம் கூறுகின்றது எமது மனிதாபிமான உதவி வாகன ஊர்வலம் இப்போது சுபன்ஜாவில் உள்ளது. அங்கிருந்து குரோஷியாவில் இருந்து வெளியேறும் அனுமதியைப் பெற்றுள்ளோம். ஆனால் நீங்கள் HVO படைகளுக்கு - பாதையைத் திறந்துவிட அனுமதி கொடுக்கும் வரை நாம் பயணம் செய்ய முடியாது."

HVOஎன்பது குரொஷியன் இராணுவமாகும் யூகோச-லாவிய உள்நாட்டு யுத்தத்தின் போது சில படுபயங்கரமான படுகொலைகளை இதுவே செய்துள்ளது. மொஸ்டர் நகரில் மட்டும் இதன் படைப்பிரிவுகள் இடைவிடாத குண்டுவீச்சுக்கள் மூலம் ஆயிரக்கணக்கான முஸ்லீம்களைப் படுகொலை செய்துள்ளன. அரசியல் ரீதியில் இது பாசிச உஷ்டாஷேயின் பாரம்பரியங்க-ளைக் கடைப்பிடிக்கின்றது. இதன் படைகளை "பாதையை திறக்கும்படி" கோருவதானது சேர்பியர்களுக்கு எதிரான முழு அளவிலான இராணுவத் தாக்குதலுக்கான ஒரு அழைப்பாக மட்டுமே அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும்.

'வேர்க்கர்ஸ் பிரஸ்' அதன் பெப்ரவரி 12ம் திகதிய வெளியீட்டில் 'வடதிசை பாதை' விடயம் தொடர்பாக தொ.பு.க. வின் திரிபுவாதக் கூட்டாளிகளை தாக்குவதற்குத் திரும்பியது. இந்த விடயத்தில் இது டுஸ்லாவுக்கான உதவியை தென் திசை பாதையூடாக விநியோகிக்க முடிவு செய்ததற்காக பிரான்சிய 'லீக் கொம்யூனி-ஸ்டா றெவலூசனரியை' கண்டனம் செய்தது.

'வேர்க்கர்ஸ் பிரஸ்' எழுதுவதாவது: ஆனால் ஓராஜ்யேயில் குரோஷியன் எல்லையிலிருந்து தொடங்கும் வடதிசைப் பாதை பிரித்தானிய அல்லது ஹங்கேரியன் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் கண்டுபிடிப்பு அல்ல. இதன் திறப்பு பொஸ்னியர்களாகவே செய்து கொண்ட தீர்க்கமான அரசியல், இராணுவ, புவியியல் ஆய்வுகளில் இருந்து பெருக்கெடுக்கும் தெளிவான [illegible]

## யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சியும் தேசிய பிரிவினைவாதமும்



1941ல் பொஸ்னியாவில் உஷ்ராஷி பாசிசப் பயங்கரத்தின் பலிகடாக்கள். 1928ல் மாஸ்கோ யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் முழுத் தலைமையையும் நீக்கியது. இச்சமயத்தில் கிரேம்ளின் முன்வைத்த தேசியக் கொள்கை ஒரு வெறிபிடித்த கட்டத்தை எட்டியது. மாஸ்கோவின் வழிகாட்டலின் கீழ் முசோலினியின் பாசிசத்தினால் ஈர்க்கப்பட்ட குரோஷியன் பயங்கரவாத அமைப்பான உஷ்டாஷேயை ஒரு முற்போக்கானதாக கணிக்கும் அளவுக்கு இக்குழப்பமான போக்கு வளர்ச்சி கண்டது. CPYன் வேலையின் பெரும்பகுதி குரோஷியன் பாசிஸ்டுகளுடன் ஒரு கூட்டினைத் தேடிக் கொள்வதாகியது.



ஜோசிப் புரோஜ்-டிட்டோ (இடது) 1944ல் 'பாட்டிசன்' தலைவர்களுடன். டிட்டோவின் தலைமையில் 1930 பதுகளில் யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சி மீளமைக்கப்பட்டது. இந்தப் போக்கு யூகோசலாவிய கம்யூனிஸ்டுகளில் பெருந்தொகையானோரை ஒழித்துக்கட்டும் சோவியத் அதிகாரத்துவத்தின் வேலையுடன் கைகோர்த்துச் சென்றது. இது சோவியத் யூனியனில் 1917 அக்டோபரின் முழுப் புரட்சிகரத் தலைமுறையையும் ஒழித்துக் கட்டியது. CPYன் மீளமைப்பு தேசிய பிரிவினைவாதத்தினை கட்சியின் அமைப்புடன் இணைத்துக் கொண்டது.



1960 பதுகளில் யூகோசலாவியத் தொழிலாளர்களின் ஒரு கூட்டம். டிட்டோவின் யூகோசலாவியாவில் பொருளாதார நலன்கள் இனக்குழு தேசியவாதத்தினை புத்துயிர் பெறச் செய்வதை அடிப்படையாகக் கொண்டிருந்தன. யூகோசலாவிய வரலாறு பற்றிய எந்தவொரு ஆழமான ஆய்வும் இன்றைய காலப்பகுதியில் தேசியவாதத்தின் வெடிப்பானது ஏதோ பழைய குரோஷியன், சுலோவீனியன், முஸ்லீம் அல்லது மசிடோனியன் 'சுயநிர்ணயத்துக்கான' தவிர்க்க முடியாத ஒரு வெளிப்பாடாக அன்றி நான்கு தசாப்தங்களுக்கு மேலாக டிட்டோவும் அவரின் வாரிசுகளும் கையாண்ட திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கைகளின் பெறுபேறாகும் என்பதைக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

5ம் பக்கம் தொடர்ச்சி

இலக்காகும். அவர்கள் பேசுவது எதைப்பற்றி என்பதை அறிந்த சக்ராபில் உள்ள டுஸ்லாவின் பிரதிநிதிகள் அவர்களிடையே உள்ளனர்."

இது மிகவும் தெளிவானது. யூகோசலாவியாவிலான தொ.பு.க.வின் நடவடிக்கைகள் பொஸ்னியன் முதலாளித்துவ ஆட்சியினால் செய்யப்பட்ட தீர்க்கமான அரசியல் இராணுவ, புவியியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டவை. அரசியலில் எந்தவிதமான வர்க்க அணுகுமுறையையும் கைவிட்ட முழு வெட்கக்கேடான ஒரு அரசியல் கட்சி இதுவாகும். சோசலிச அடிப்படைக் கொள்கைகளும் பாட்டாளி வர்க்கத்தின் சுயாதீனமான நலன்களும் பற்றிய பிரச்சினைகள் இதன் கணிப்புக்களில் இடம்பெறுவதே கிடையாது.

சமீப வாரங்களில் சரஜீவோவாவிலான நேட்டோ குண்டுவீச்சுக்கான காலக்கெடுவைத் தொடர்ந்து கொராஸ்டேயைச் சூழவுள்ள சேர்பிய நிலைகளுக்கு எதிரான நிஜ விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன. நேட்டோவின் உள்ளும் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளும் டுஸ்லாவுக்கு குண்டுவீச்சு அச்சுறுத்தலை விஸ்தரிப்பது பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்ப மாகியுள்ளன. சுலோற்றரும் குரோஷியன், பொஸ்னியன் அரசாங்கங்களில் உள்ள அவரின் கூட்டாளிகளும் அமெரிக்க யுத்த விமானங்களின் 'வடதிசை பாதை'யை திறக்கும் தமது கோரிக்கை யதார்த்தமாகுவதை நன்கு காண முடியும்.

ட்றொட்ஸ்கிஸ்டுகளெனக் கூறிக் கொள்ளும் ஒரு குளு இதற்கு முன்னர் ஒருபோதுமே ஒரு ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான தாக்குததலை தயார் செய்வதில் முதலாளித்துவ ஆட்சிகளுடனும் ஏகாதிபத்திய இராணுவத்துடனும் நேரடியாக இணைந்து கொண்டது கிடையாது. தொ.பு.க. தன்னை ஒரு பொஸ்னியன், குரோஷியன் யுத்த அமைச்சுக்களதும் ஐ.நா. நேட்டோக்களதும் இணைப்பாக மாற்றிக் கொண்டுள்ளது.

சுலோட்டரினது அமைப்பின் இந்தத் திருப்பம், 1985 பிளவினுள் உச்சக் கட்டத்தினை அடைந்த தொ.பு.க.வின் தேசிய சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக அனைத்துலக குழுவினுள் இடம் பெற்ற போராட்டத்தின் புறநிலை முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துகின்றது. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாத மூலகங்கள் அம்பலப்படுத்தப்பட்டு நான்காம் அகிலத்தில் இருந்து வெளியேற்றப் படாதிருப்பின் அனைத்துலகக் குழுவும் ஏகாதிபத்தியத்தின் ஒரு அரசியல் முண்டு கோலாக மாறச் செய்யப்பட்டிருக்கும்.

தொ.பு.க.வின் பரிணாமம், ஒரு கணிசமான காலப்பகுதிக்கு ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மீதும் முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் மீது சார்ந்து வந்த முழு குட்டி முதலாளித்துவ, இடதுசாரி தட்டினரதும் சீரழிவுப் போக்கின் ஒரு பாகமாகும். சோவியத் யூனியனின் சரிவுடனும் தேசிய விடுதலை இயக்கங்களின் உலகளாவிய ரீதியிலான அடிபணிவுடனும் இந்தச் சமூகத் தட்டினர் அவசரஅவசரமாக ஏகாதிபத்திய முகாமினுள் நுழைந்தனர்.

அனைத்துலகக் குழுவின் பிளவின் பின்னரான ஒன்பது ஆண்டு காலத்தினுள் தொ.பு.க. ஒரு பூரணமான அரசியல் பரிணாமத்துக்கு உள்ளாகியுள்ளது. இதன் அரசியல் போக்கும் இதன் நடைமுறை செயற்பாடுகளும் சில விநோதமான மாற்றங்களையும் திருப்பங்களையும் காட்டிக் கொண்ட போதிலும் அதன் முழு நடவடிக்கைகளின் ஊடாக ஒரு திட்டவட்டமானதும் தொடர்ச்சியானதுமான நூல் ஓடியுள்ளது. கிளிவ் சுலோற்றரின் அரசியல் வழிகாட்டலின் கீழ் இந்த அமைப்பின் அங்கத்தவர்கள் இதன் அரசியலை தீர்மானம் செய்கையில் எதுவிதமான வர்க்க விமர்சனத்தையும் கைவிடும்வண்ணம் ஒழுங்குமுறையாகப் பயற்றப்பட்டனர்.

### 14. குட்டி முதலாளித்துவ தார்மீக வாதிகளும் ஏகாதிபத்தியப் பதில்நடவடிக்கையும்

பிளவு இடம்பெற்ற வேளையில் சுலோற்றர் 'புரட்சிகர தார்மீகம்' என்ற சுலோகத்தை முன்வைத்ததோடு, தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள்ளேயான நெருக்கடி அதன் தலைமை 'மனிதஇன தனிநபர்களின் உரிமைகளை' அங்கீகரிக்கத் தவறியதன் ஒரு பெறுபேறாகும் எனப் பிரகடனம் செய்தார். அதே சமயத்தில் அனைத்துலகக் குழு சுலோற்றர் வர்க்கமல்லாத பதங்களை பயன்படுத்துவதை சுட்டிக் காட்டியதோடு அவை அதன் உள்ளடக்கத்தில் முதலாளித்துவ லிபரல்களான கம்யூனிஸ்ட் விரோத வாயடிப்புக்களுடன் ஒத்திருந்தன.

தொ.பு.க. உடனடியாக ஒரு ஆத்திரமூட்டும் பகிரங்க பிரச்சாரத்தினை அபிவிருத்தி செய்தது. அது இந்த குட்டி முதலாளித்துவ தார்மீக வாதத்தில் இருந்து பெருக்கெடுத்தது இயற்கையே. 1988ல் 'வைல்ட் போயர்' வழக்கில் (Wild Boar trial) ஒரு வினோதமான சம்பவம் இடம் பெற்றது. அந்த வழக்கில் உதைபந்தாட்ட போட்டிகளில் கறுப்பு இன, ஆசிய தொழிலாளர்களையும் இளைஞர்களையும் வேறுபடுத்தி உடல்ரீதியாகத் தாக்குதல் நடாத்திய பாசிச அனுதாபிகள் கும்பலின் ஒரு தலைவனாக விளங்கிய குற்றத்தின் பேரில் சுலோற்றரின் மகன் பட்ரிக் குற்றவாளியாகக் கணைப்பட்டு சிறையில் தள்ளப்பட்டாந்.

வழக்கு விசாரணை இடம்பெற்ற சமயத்தில் தொ.பு.க. இந்தக் குற்றச் சாட்டுக்களை ஒரு போதும் சவால் செய்யவில்லை. பட்ரிக்குக்கு தண்டனை வழங்கப்பட்ட ஆறு வாரங்களின் பின்னர் இது அனைத்துலகக் குழுவுக்கும், வேர்க்கர்ஸ் லீக்குக்கும் எதிரான ஒரு சேறடிப்பு பிரச்சாரத்தை அனைத்துலக ரீதியில் ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் அனைத்துலகக் குழுவின் எந்தவொரு பகுதியும் இந்த விவகாரம் சம்பந்தமாக ஒரு வரியும் எழுதாது இருந்த வேளையில் சுலோற்றர் தமது மகனின் நிலையையிட்டு போதுமான அனுதாபம் காட்டாமைக்காக ட்றொட்ஸ்கிச இயக்கத்தைக் கண்டனம் செய்தார்.

ஆச்சரியமான முறையில் அவர் இந்த Wild Boar வழக்கின் பிரதிவாதிகளை - இதில் பேர்போன பாசிஸ்டுகள், தேசிய முன்னணி (N.F.) அனுதாபிகள் அடங்குவர் - "முதலாளித்துவத்தினதும், டோரிகளதும் சமூக நெருக்கடியின் பலிகடாக்களாக வேட்டையாடப் பட்டுள்ள ஒரு இளைஞர் குழுலவாக வருணித்தார்.

இறுதியில் அவர் "அவரினால் நாசமாக்கத் தீர்மானிக்கப்பட்ட ஆட்களின் தனிப்பட்ட குணவியல்புகளையும், நேர்மையையும் நிர்ப்பந்திப்பதாகவும்" ஒடுக்குவோர்களின் எதிரில் புறநிலைமைக்காகவும் மனித கௌர-வத்துக்காகவும் கொள்கைப்பிடிப்பான போராட்டத்தினை" பகிஷ்கரிப்ப தெனவும் அவர் குறிப்பிட்டுக் கொள்வதன் பேரில் வேர்க்கர்ஸ் லீக் தேசிய செயலாளர் டேவிட் நோர்த்தை கண்டனம் செய்தார். இவை எல்லாம் வன்முறை இனவாத தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த ஒரு கூட்டம் மத்தியதர வர்க்கக் குண்டர்களையும் பாசிச காடையர்களையும் பேணுவதற்கு மறுத்தமைக்காகவே!

பின்னர் 1990ல் தொ.பு.க. முதலாளித்துவ தேசியவாத சுவாபோ (SWAPO) இயக்கத்துக்கு எதிராகத் நெறிப்படுத்தப் பட்ட ஒரு வலதுசாரி மனித உரிமைகள் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. நமீபியாவின் முதலாவது தேர்தல் இடம் பெறவிருந்த சமயத்தில் தொடுக்கப் பட்ட இந்த பிரச்சாரத்தின் புறநிலையானது நமீபியன் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு அரசியல் சுதந்திரத்தினை உருவாக்கிக் கொடுப்பதற்காக அன்றி, உள்நாட்டு ஒடுக்குமுறை பற்றிய பெரிதும் பூதாகாரப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 'சுவாபோவை' தூஷிப்பதாக விளங்கியது. இந்தப் பிரச்சார இயக்கம் தென்னாபிரிக்க உளவுச் சேவையான BOSSனால் தொடுக்கப்பட்ட இத்தகைய செய்முறைகளுடன் ஒத்துப்போகும் விதத்தில் தெளிவாக தயார் செய்யப்பட்டது.

இந்த நிலைப்பாடுகளின் நிஜ முக்கியத்துவம் இப்போது பெரிதும் தெளிவாகியுள்ளது. இது ஒரு புறத்தில் கட்சியின் அரசியலையும் மறுபுறத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க நலன்களுக்கும் மார்க்சிசத்தின் கொள்கைப் பிடிப்பான நிலைப் பாடுகளுக்கும் இடையே எந்தவிதமான உறவும் இருப்பதை நிராகரிக்க சிந்தனாமுறையில் அங்கத்தவர்களை சீரழியச் செய்து அதன் மூலம் அரசியல் ரீதியில் தைரியம் இழக்கச் செய்ய உதவியது.

பால்கனின் யுத்தத் திசையில் கட்டவிழ்க்கப்பட்ட சக்திவாய்ந்த தேசியவாத அளுத்தங்களின் கீழ் தொ.பு.க. அதன் அரசியல் பரிணாமத்தினை பூர்த்தி செய்து கொண்டுள்ளது. பால்கன் அரசுகளின் முதலாளித்துவ அமைச்சுக்களுள் வரவேற்கப்பட்ட ஒரு கட்சி - பாசிச இராணுவத்தின் சேவைகளுக்குப் பேரம்பேசுகின்றதும் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு இராணுவத் தளபாடங்களை போக்குவரத்துச் செய்கின்றதும், அவ்வாறே ஏகாதிபத்திய இராணுவத் தலைமீடுகளுக்காக பிரச்சாரம் செய்கின்றதுமான ஒரு கட்சி உண்மையில் மறுபக்கத்தைச் சேன்றடைந்துள்ளது.

தொ.பு.க. இன்று ஒரு மத்தியவாத அமைப்பாக வரைவிலக்கணம் செய்யப்பட முடியாது. இது சீர்திருத்தத்துக்கும் புரட்சிக்கும் இடையே எங்கோ ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ள கட்சி அல்ல. இது தொடர்ந்தும் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினை வழக்கறான முறையில் தன்னும் ஏற்றுக் கொள்ளும் ஒரு குழு அல்ல. இது ஒரு முதலாளித்துவ வேலைத்திட்டத்தினை யதார்த்தமாக்கும் நோக்கத்தில் ஏனைய முதலாளித்துவ வர்க்க சக்திகளின் மேல் சார்ந்து கொள்வதன் அவசியத்தை அழுத்தும் திருத்தமாக பிரகடனம் செய்துள்ளது.

பால்கனின் சமுதாயத்தை சோசலிச மறுசீரமைப்புச் செய்யும் ஏஜன்டாக இது தொழிலாளர் வர்க்கத்தை நிராகரிப்பின் இது இங்கிலாந்திலும் அதனை நிராகரித்தே ஆகவேண்டும். பால்கனிலான தனது இலக்குகளை அடைய இது முதலாளித்துவ அரச படைகளைப் பயன்படுத்துமாயின் இது அதனை பிரிட்டனிலும் செய்யும்.

பொஸ்னியாவில் தொ.பு.க. தேசிய பாதுகாப்பின் ஒரு தேசாபிமானக் கட்சியாகவும், ப்டுபிற்போக்கு தேசியவாத படைகளின் விசுவாசத்துக்குரிய ஒரு கூட்டாளியாகவும் தொழிற்படத் தான் தயார் என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது. பிரித்தானியாவில் இதே பாத்திரத்தினை இட்டுநிரப்புவதை தடைசெய்ய அடியோடு எதுவும் இல்லை. இது ஏற்கனவே தொழிற் சங்கங்களதும் தொழிற் கட்சி அதிகாரத்துவங்களதும் இணைப்பாகவும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான அரசியல் சூழ்ச்சியின் ஒரு வாகனமாகவும் தொழிற் பட்டு வருகின்றது. எதிர்கால த்தின் ஒரு கட்டத்தில் இது தேசிய மீட்சியின் ஒரு முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் ஒரு பாகமாக மாறலாம்.

சுருங்கச் சொன்னால் தொ.பு.க.வை நான்காம் அகிலத்தில் இருந்து பிரிக்கும் கோடுகள் புரட்சியை எதிர்ப்புரட்சியில் இருந்து பிரிக்கும் கோடுகளாகும். இக்கட்சி நீண்ட தேசியவாத சந்தர்ப்பவாத சீரழிவின் விளைவாக ஒரு முதலாளித்துவப் போக்காக மாறியுள்ளது.

தொ.பு.க.வின் அரசியல் பரிணாமம், உலகளாவிய ரீதியில் வர்க்க உறவுகளில் இடம்பெறும் மிகமுக்கியமான பெயர்ச்சிகளின் கட்டியக்காரனாக உள்ளது. புரட்சிகர கிளர்ச்சி எழுச்சிகளின் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் முன்னோடியாக அத்தகைய அரசியல் மாற்றங்களும், மறுகூட்டுக்களும் இடம்பெறுகின்றன. எதிர்வரும் வர்க்கப் போராட்டத்தினுள் இட்டுநிரப்பும்படி அழைக்கப்படும் பாத்திரத்திற்காக அரசியல் கட்சிகள் தம்மை தயார் செய்கின்றன. குட்டி முதலாளித்துவ மத்தியவாத இயக்கங்களின் அத்தகைய பரிணாமங்கள் 1930 பதுகளிலும் 1940 பதுகளிலும் அடிக்கடி தரிசிக்கப்பட்ட[illegible]

சுலோற்றரும் அவரின் தொ.பு.க.வும் தமது நிலைப்பாட்டை எடுத்துள்ளன. டுஸ்லா வழியாக அவர்கள் ஏகாதிபத்திய முகாமைச் சென்றடைந்துள்ளனர்.

முதலாளித்துவ ஆட்சியின் அத்திவாரம் குழிபறிந்து போய்க் கொண்டுள்ள நெருக்கடிக் காலப்பகுதியில் முதலாளித்துவம் தொழிலாளர் வர்க்கத்தினுள் தீர்க்கமான பாத்திரத்தினை வகித்த ஆட்களிடமிருந்து உதவி வேண்டுவதாக சுலோற்றர் ட்றொட்ஸ்கிச இயக்கத்தின் தலைமை உறுப்பினராக விளங்கிய போது அடிக்கடி சுட்டிக்காட்டியதுண்டு. இரண்டாவது மூன்றாவது அகிலங்களைப் பொறுத்தமட்டில் அது அப்படியே இருந்தது. அவ்வாறே லங்கா சமசமாஜக் கட்சி இலங்கையில் திருமதி பண்டாரநாயக்கவின் முதலாளித்து[illegible] அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டது பற்றிய சொந்த அனுபவமும் நான்காம் அகிலத்துக்கு உண்டு.

அனைத்துலகக் குழுவினுள் சந்தர்ப்பவாதப் போக்குக்கள் தோன்றுமாயின் அதன் தலைவர்கள் ஏகாதிபத்தியத்தின் சார்பில் நேரடிச் சேவை செய்ய இழுக்கப் பட்டுள்ளதை விரைவாகக் காண்பார்கள் என தீர்க்கதரிசனம் கூறும் அளவுக்கும் அவர் சென்றார்.

அந்த நாட்களில் கிளிப் சுலோற்றர் அத்தகைய ஒரு போக்கின் தலைவராகத் தானே மாறுவார் என்பதையும் ஒரு ஏகாதிபத்தியத்தின் இரத்தம் தோய்ந்த குற்றங்களின் சகபாடியாகத் திரட்டப்படுவார் என்பதையும் கற்பனை செய்திருக்க முடியுமா?

1994 மே 7.

மிகுதி அடுத்த இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க-ஜப்பான் வர்த்தக பேச்சுவார்த்தைகள் முறிவின் பின்னணியில்

கிளின்டன் நிர்வாகம் ஆகஸ்ட் 1ம் திகதியில் இருந்து ஜப்பானுக்கு எதிரான வர்த்தகத் தடை விதிகளை மேலும் உக்கிரமாக்கியுள்ளது. இதன் மூலம் உலகின் இரு பெரும் பொருளாதாரச் சக்திகளுக்கு இடையிலான உறவுகளில் ஒரு பூரண வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்து 50 ஆண்டுகளின் பின்னர் ஜப்பானும் அமெரிக்காவும் மீண்டும் வர்த்தகப் போரில் குதித்துள்ளன.

ஜூலை 30-31ம் திகதிகளில் வாஷிங்டனில் நடைபெற்ற வர்த்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியான மைக்கி கன்டர் ஜப்பானிய இறக்குமதிகளுக்கு எதிரான தடைக்கான காலக்கெடுவாக செப்டம்பர் 30ம் திகதியை அறிவித்தார். அத்தோடு அதே திகதியில் இருந்து 'சுப்பர்—301' விதிகளின் கீழ் அமெரிக்க வர்த்தக நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன.

தகராறுக்கான உடனடிக் காரணி வைத்திய, தொலைத்தொடர்பு கருவிகளை அமெரிக்காவிடம் இருந்து ஜப்பான் அரசாங்கம் கொள்வனவு செய்வது பற்றியதாகும். டோக்கியோ ஒப்பந்தத்தின் உத்தரவாதம் செய்யப்பட்ட ஒரு பங்கு அமெரிக்க கூட்டுத்தாபனங்களுக்குச் செல்லவேண்டும் என அமெரிக்கா கோரியது. ஒரு வருடகாலத்துக்கு மேலாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஜப்பானியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஜப்பானியச் சந்தையில் அமெரிக்கன் பங்குவீதாசாரத்தினை திணிப்பதை எதிர்த்து வந்தனர்.

இறுதியான அமெரிக்க மிரட்டல் பிரதமர் ரொமிச்சி முராயாமாவின் அரசாங்கத்திடமிருந்து ஆத்திரத்தை தூண்டி விட்டுள்ளது. பிரதம அமைச்சரவை செயலாளரான கோசோ இகாராஜி இதையிட்டு திட்டவட்டமாகக் கூறியதாவது; ''தடை விதிக்கும் அச்சுறுத்தல்களின் கீழ் பேச்சுவார்த்தைக்கு செல்லும் நோக்கம் கிடையாது'' என்றுள்ளார். அப்படித்தான் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் எந்தவொரு பக்கமும் சலுகைகள் வழங்குவதாய் இல்லை.

அமெரிக்கா உலகின் பெரும் கடனாளி நாடாகவும் பிரமாண்டமான வர்த்தகப் பற்றாக்குறையையும் — குறிப்பாக ஜப்பானுடன் — கொண்டுள்ளது. சகல வழிவகைகளையும் கையாண்டு — யென்னின் பெறுமதியை அதிகரிக்கச் செய்வது உட்பட — ஜப்பானிய சந்தையை அமெரிக்கப் பொருட்களுக்குத் திறந்துவிட நெருக்கும்படி வோல் ஸ்ரீட் வங்கியாளர்கள் கோரி வருகின்றனர்.

ஜூலை 18ம் திகதிய 'பிஸ்னஸ் வீக்' சஞ்சிகை அதனது ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு பிரகடனம் செய்தது: ''இரண்டு தசாப்தங்களுக்கு அமெரிக்கா அடித்து மூடப்பட்ட ஜப்பானிய கதவுகளை தள்ளிவந்துள்ளது. ஆனால் அதிகாரத்துவங்களும் வர்த்தகர்களும் அதைத் திரும்பத் தள்ளிவந்தனர். ஆனால் இன்றைய உள்நாட்டு வர்த்தகப் போக்கு அமெரிக்காவிற்குச் சாதகமாகத் தொழிற்படுகின்றது. 'சுப்பர் யென்' ஏற்கனவே ஜப்பானிய பொருளாதாரக்



பில் கிளின்டன்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனி — லுத்விக் நீத்தமர் தாக்கப்பட்ட 15 மாதத்தின் பின்னர்

# குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதில் பீ. எஸ். ஏ. வெற்றி



லுத்விக் நீத்தமர்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பகுதியான பன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரின் மத்திய குழு உறுப்பினரான லுட்விக் நீத்தமர் கோரமாகத் தாக்கப்பட்ட 15 மாதங்களின் பின்னர் குற்றவாளிக்கு நீதிமன்றம் 14 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஆகஸ்ட் 17ம் திகதி நடைபெற்ற 5 மணித்தியால வழக்கு விசாரணையின் பின்னர் நீதிபதி பிரோ குயில்மன், தீர்ப்பை வழங்கினார். இதன்படி ஒலிவர் வண்டல் சிறையுள் தள்ளப்படவேண்டும் எனவும் முழுக்கால தண்டனையையும் சிறையுள் கழிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிட்டார்,

பீ.எஸ் ஏ. தலைவரான நீத்தமர் ஸ்ரட்காட் டிஸ்கோவை விட்டு வெளியேறும் போது 1993 மே 30ம் திகதி தாக்கப்பட்டார். கடும் காயங்கள் ஏற்பட்டதோடு அவரின் கன்னத்தின் எலும்பும் முறிந்தது. முகத்தின் நரம்புகள் இயங்காது போயின.

வண்டேலுக்கு எதிரான இந்தத் தீர்ப்பும் தண்டனையும் பீ.எஸ்.ஏ யும் நான்காம் அகிலத்தின் ஏனைய பகுதிகளும் நடாத்திய அரசியல் பிரச்சாரத்தின் ஒரு உச்சக் கட்டமாகும். இந்த அனைத்துலகப் பிரச்சார இயக்கம் இடம்பெறாது போய, பொலிசாரும், புனர்விசாரணை அதிகாரிகளும் மனம் போன போக்கில் செயற்பட இடமளிக்கப்பட்டிருப்பின் வண்டேல் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கவே மாட்டான். வண்டேல் நடாத்திய தாக்குதல் லுட்விக்குக்கு எதிராக மட்டுமன்றி பீ.எஸ்·ஏ யை உள்ளடக்கிய நான்காம் அகிலத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டதாகும். இனவாதத்துக்கு எதிராக ஒரு நிலைப்பாட்டினை எடுப்பவர்களையும், பாசிச போக்குக்களை எதிர்ப்பவர்களையும் — அதற்கு ஆதரவு வழங்கும் அரசு, பொலிசு, நீதிமன்றத்தினை எதிர்ப்பவர்களையும் குழப்பியடிப்பதே இதன் நோக்கமாகும்.

கட்சியைக் குழப்பியடிக்க எடுக்கப்பட்ட இம் முயற்சியை பீ.எஸ் ஏ, திட்டவட்டமான முறையில் எதிர்த்து நின்று செயற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கடிதங்கள் வெறுமனே ஜேர்மன் தொழிலாளர்கள், தொழிற்சங்கவாதிசள், புத்திஜீவிகள் என்போரிடமிருந்து மட்டுமன்றி இன்னும் பல நாடுகளில் இருந்தும் அனுப்பப்பட்டன. குற்றவாளியை கைது செய்து பூரணவிசாரணை செய்யும்படி கோரி அனுப்பப்பட்ட இக்கடிதங்கள் அதிகாரிகள் வழக்கை கைவிடுவதை அசாத்தியமாக்கியதோடு, வண்டேல் விடுதலை செய்யப்படுவதையும் கஷ்டமாக்கியது. இத்தகைய சம்பவங்கள் இன்னும் பல பாசிச, இனவாத கலவரங்கள் தொடர்பான வழக்குகளில் இடம் பெற்றுள்ளன.

நீத்தமர் நீதிமன்றத்தில் இணை வழக்காளியாக தோன்றும் உரிமை கோரி விண்ணப்பம் செய்தார். அதில் வெற்றியும் கண்டார். இதனால் பொலிசாரின் கோவைகளை படிக்க முடிந்ததோடு சாட்சிகளை அழைக்கவும் அவர்களை வழக்கு விசாரணையின் போது விசாரிக்கவும் வாய்ப்புக் கிட்டியது.

பீ.எஸ்.ஏ.யின் அரசியல் பிரச்சாரமும் நீத்தமரின் சட்டரீதியான பிரச்சாரமும் ஒரே இலக்கையே கொண்டிருந்தன, குற்றவாளி சிறையிலிடப்பட வேண்டும். தாக்குதலின் அரசியல் பின்னணி அம்பலப்படுத்தப்பட வேண்டும். முதலாவது இலக்கு அடையப்பட்டுள்ளது. வழக்கின் ஆரம்ப விசாரணைகளின் போது இரண்டாவது இலக்கினை விசாரணை அதிகாரிகளும், அரச வழக்குத் தொடுநரும் எதிர்த்தனர். விசாரணையின் ஆரம்பத்தில் வண்டேல் தனது தாக்குதலுக்கென ஒரே ஊக்கி, மதுவெறியே எனக் கூறினான். இந்தச் சாட்சியத்தை அவனின் சட்டத்தரணி மட்டுமன்றி அரச வழக்குத் தொடுநரும் ஆதரித்தனர். நீதிபதி இறுதியில் இந்த குடிவெறிதான் தாக்குதலுக்கு காரணம் என்ற சாட்சியத்தை நிராகரித்த போதிலும் தாக்குதலுக்கு அரசியல் ஊக்கி காரணமாக இருந்தது என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அதற்கு எதுவிதமான அத்தாட்சியும் சமர்ப்பிக்கப்படவில்லை என அவன் கூறினான்.

ஸ்ரட்காட் டிஸ்கோவின் முகாமையாளரும் வண்டேலின் நீண்டகால நண்பருமான ராவ் வெப்பர் பொலிஸ் விசேட அதிரடிப்படை பிரிவுடன் இவன் நெருக்கமாக தொழிற்பட்டதை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார். அத்தோடு இவன் மொட்டைத் தலையர் அமைப்பின் தலைவரான அன்ட்ரீஸ் வோக்டுக்கும் பழக்கமானவன் எனத் தெரிவித்தார். இவர்கள் இந்த கிளப்புக்கு அடிக்கடி விஜயம் செய்து வந்தனர். இந்தச் சாட்சியங்களுக்கு மத்தியிலும் பொலிசார் நீத்தமரின் தாக்குதலுக்கான பின்னணியை கண்டறிய மறுத்தனர். இத்துடன் இதனை மூடிமறைக்கும் பொருட்டு இத்தாக்குதல் சம்பந்தமாக உள்ளூர் பத்திரிகைகளில் எதுவிதமான செய்திகளும் வெளியாகாவண்ணம் பொலிசார் பார்த்துக் கொண்டனர். அத்தோடு இது ஓர் 'அரசியல் தாக்குதல் இல்லை' எனக் காட்டுவதில் அவர்கள் முழுமூச்சாய் நின்றனர்.

ஜேர்மனி பூராவும் பாசிஸ்டுகளது தாக்குதலில் இருந்து அகதிகள், அடைக்கலம் கோருவோர், வெளிநாட்டுத் தொழிலாளர் தப்பும் பொருட்டு தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டிகளை அமைப்பது மையப் பணியாகியுள்ளதை பீ.எஸ் ஏ. சுட்டிக்காட்டியுள்ளது. அந்தக் கமிட்டிகள் பாசிச குண்டர்கள், மொட்டைத் தலையர்கள், இனவாதிகள் தொடர்பான ஒழுங்குமுறையான தகவல்களை சேகரிக்க வேண்டும் எனவும் அதன் அடிப்படையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கண்டறிய பீ.எஸ்.ஏ. உதவிகோரி அழைப்பு விடுத்த வேளையில் 'பாசிச எதிர்ப்பாளிகள்' (Anti Fascists) எனக் கூறிக் கொள்ளும் எண்ணற்ற குழுக்கள் சின்னி விரலைத் தன்னும் உயர்த்த முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க - ஜப்பான் வர்த்தக பேச்சு...

( 7-ஆம் பக்கத் தொடர்ச்சி )

கதவுகளைத் திறக்கத் தள்ளி வருவதோடு வாஷிங்டனின் வர்த்தகப் பேரம் பேச்சாளர்களும் உள்ளே நுழைந்து கொள்ள வேண்டும்.''

எப்படியிருப்பினும் ஜப்பானின் பெரும் வர்த்தக நிறுவனங்கள் சமரசத்துக்கு ஆயத்தமாக இல்லை. அதன் ஆட்டம் கண்டுபோன நிதிமுறையானது ஏற்கனவே கோடானுகோடி அமெரிக்க டாலர்கள் அறவிட முடியாக் கடனால் தலைமூழ்கிப் போயுள்ளது. இதன் பெறுபேறாக 1980பதுகளின் இறுதியில் இருந்து சொத்துக்களதும் பங்குகளதும் பெறுமானம் தலைகீழாக வீழ்ச்சி கண்டுள்ளது.

ஜப்பானிய ஏற்றுமதிகளை மேலும் செலவுக்கிடமானது ஆக்குவதன் மூலம் சமீபத்தில் ஏற்பட்ட யென்னின் அதிகரிப்பு பெரும் கூட்டுத்தாபனங்களின் நின்றுபிடிக்கும் தன்மையை அச்சுறுத்திக் கொண்டுள்ளன. ஒரு மதிப்பீட்டின் படி அமெரிக்க டாலர் 95 யென்னாக இருந்துவரின் ஜப்பானின் 200 மாபெரும் கம்பனிகள், 1995 மார்ச்சில் முடிவடையும் நிதியாண்டின் இறுதியில் 10% வீத இலாப வீழ்ச்சியை காண நேரிடும்.

ஜப்பானின் உற்பத்திக் கைத்தொழிலில் ஏற்கனவே பல்லாயிரக் கணக்கானோரின் தொழில்கள் அழிக்கப்பட்டுள்ளதோடு, இன்னும் பலரின் தொழில்கள் அச்சுறுத்தப்பட்டு வருகின்றன. மஸ்டா 3000 வேலைகளை வெட்டத் திட்டமிட்டுள்ளது. இராட்சத NTT கம்பனி சமீபத்தில் முன்கூட்டியே ஓய்வுபெறச் செய்யும் திட்டத்தின் கீழ் 4000 தொழில்களை அழித்தது. இந்த ஆண்டில் இன்னும் 6000 தொழில்கள் அழிக்கப்படவுள்ளது.

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான ஆழமாகி வரும் கசப்புக்கள் வெறும் கருத்துவேறுபாடுகள் அல்ல. அவை தீர்வுகாணப்பட முடியாத முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகளில் இருந்து தோன்றுகின்றன. மிக முக்கியமாக பூகோளரீதியான பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுகளாகப் பிரிக்கப்பட்ட காலவதியான உலகுக்கும் இடையேயான முரண்பாடுகள் உக்கிரம் கண்டுள்ளன. இந்த நூற்றாண்டு பூராவும் பெரும் ஏகாதிபத்தியச்சக்திகள் அடிக்கடி சந்தைகள், மலிவான உழைப்பு வளங்கள், மூலப் பொருட்கள் மீது மோதிக் கொண்டுள்ளன. தனது போட்டியாளர் மீது அமெரிக்கா ஒரு பொருளாதார மேலாதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டிருந் ஒரு சிறிய காலப் பகுதியிலேயே வர்த்தகம், நிதி தொடர்பான அனைத்துலக விதிகள் சாத்தியம் என்று நிரூபிக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்து அமெரிக்க புதிய பொருளாதார ஒழுங்கின் விதிமுறைகளை திணிக்க முடிந்தது 1944ல் இடம்பெற்ற பிரெட்டன் வூட்ஸ் மகாநாட்டில் அமெரிக்க டாலர் தங்கத்துடன் பிணைக்கப்பட்டது. அத்தோடு அனைத்துலக நாணய அமைப்பின் மையமாகவும் மாறியது. சர்வதேச நாணய நிதியம், வர்த்தகம், வரி தொடர்பான பொது உடன்படிக்கை (GATT), உலக வங்கி ஆகியன அன்று உலக வர்த்தகத்தையும் நிதியையும் ஒழுங்குபடுத்தும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டன. யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நிலைநாட்டப்பட்ட உறவுகள் இந்த பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கையின் ஒருபாகம். ஆசியப் பிராந்தியத்திலான புரட்சிகர எழுச்சிகளுக்கும், பிரமாண்டமான வேலைநிறுத்த அலைகளுக்கும்—ஜப்பான் உட்பட முகம் கொடுத்த நிலையில் முன்னைய எதிரிகள் ஒரு கூட்டை உருவாக்கினர். இது பின் 1952ல் அமெரிக்க - ஜப்பான் பாதுகாப்பு உடன்படிக்கை என்ற பேரில் அழைக்கப்பட்டது.

ஜப்பான் ஒரு தோல்வி கண்ட வல்லரசு என்ற முறையில் அமெரிக்காவுக்கு கீழ்ப் படிந்த பாத்திரத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் அமெரிக்க நிர்வாகம் ஜப்பானிய பொருளாதார மீட்சிக்கான திட்டத்தை வகுத்தது. 360 யென் சமன் ஒரு டாலர் என்ற முறையில் மிகக் குறைந்த வீதத்தில் வைக்கப்பட்டதன் மூலம் யப்பானிய ஏற்றுமதிகள் அமெரிக்காவுள் பெருக்கெடுக்க வாய்ப்புக் கிடைத்தது. அதே சமயம் யப்பானிய சந்தைகள் அமெரிக்கன் கம்பனிகளின் போட்டிகளுக்கு எதிராக சார்பு ரீதியில் பாதுகாக்கப்பட்டு வந்தது. தென் கிழக்கு ஆசியாவில் ஜப்பானுக்கு சந்தை வாய்ப்புக்களுக்கும் முக்கியமான மூலப்பொருட்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அத்தோடு 1950பதுகளில் உலக வங்கியிடமிருந்து கடன்பெறும் ஒரு முக்கிய நாடாகவும் ஜப்பான் விளங்கியது.

ஆசியாவில் அமெரிக்காவின் முக்கிய இராணுவ நடவடிக்கைகளின் ஒரு தளமாக ஜப்பான் மாறியது. கொரியாவுக்கும் வியட்நாமுக்கும் எதிரான ஏகாதிபத்திய யுத்தங்களின் போது பெரும் வர்த்தக நிறுவனங்கள் அமெரிக்க படைகளுக்கு விநியோகிப்பதன் மூலம் பிரமாண்டமான இலாபம் உழைத்தன. 1951-1960க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜப்பானில் அமெரிக்க இராணுவ சரக்குக்கள் 6 மில்லியன் டாலர்களாகவும் ஜப்பானின் மொத்த இறக்குமதியில் 14%வீதத்துக்கு சமமாகவும் விளங்கியது.

1960 பதுகளால் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் இருந்து பெரும் போட்டியின் வளர்ச்சிக்கு முகம் கொடுத்தது. பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கை தொடர்ந்து நின்று பிடிக்க முடியாமல் போயிற்று. ஜனாதிபதி நிக்சன் 1971 ஆகஸ்டில் தங்கத்துக்கும் டாலருக்கும் இடையேயான மாற்றத்தகு தன்மைக்கு முடிவு கட்டினான். அத்தோடு ஜப்பானில் இருந்து இறக்குமதியாகும் துணிவகைகளுக்கும் 'கோட்டா' முறையை நிக்சன் விதித்தான். இதன் மூலம் இன்றைய வர்த்தக யுத்தத்துக்கான முதல் வேட்டு தீர்க்கப்பட்டது.

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான மோதல்களின் அதிகரிப்பு உலகு எங்கும் உள்ள தொழிலாளர்களுக்கு ஒரு ஆழமான எச்சரிக்கையாக விளங்க வேண்டும். இரண்டு உலக யுத்தத்தின் காட்டுமிராண்டித்தனங்களுக்கும் கோடானுகோடி மக்களின் படுகொலைகளுக்கும் இட்டுச் சென்ற முரண்பாடுகளை முதலாளித்துவத்தினால் தீர்த்துக்கொள்ள முடியாது போய் விட்டது. அமெரிக்க, ஜப்பானிய, அனைத்துலக தொழிலாளர்கள் ஒரு ஒன்றிணைந்த போராட்டத்தின் மூலம் வங்குரோத்து இலாப முறைக்கு முடிவுகட்டி இதனை ஒரு திட்டமிட்ட உலகசோசலிச பொருளாதாரத்தின் மூலம் பதிலீடு செய்வதிலேயே ஒரு தீர்வு தங்கியுள்ளது.

பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு விஞ்ஞாபனம்:

**ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்)

விலை– ரூபா 20

# பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் விடுதலைப்...

( 1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமானத்தை திரட்டுவதற்கான நிலைமைகளை ஸ்தாபிதம் செய்வதே. இதற்குத் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்கள் அனுபவிக்கும் அனைத்து சமூக நலன்புரி சேவைகளை வெட்டியும் அவற்றைக் காப்பதற்கு அவர்கள் பயன்படுத்தக் கூடிய சகல ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டியும் தொழிற்படும் ஆட்சி முறையை ஸ்தாபிதம் செய்வது ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவசியமாகி உள்ளது. ஏகாதிபத்தியத்தின் ஆசீர்வாதங்களின் கீழ் சமசமாஜ— ஸ்டாலினிச—நவசம சமாஜ தலைவர்களின் பக்கபலத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்ந்துள்ளதும், விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட்ட தமிழ்முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டுக்காக இப்போது நடவடிக்கைகள் இடம்பெறுவதும் அந்த அவசியத்துக்கு இணங்கவே யாகும். யுத்தத்தினை நிறுத்தும் தோரணையில் இந்த பிற்போக்குக் கூட்டுக்கான துரும்புகள், 'அவுஸ்திரேலியத் திட்டம்'' 'கனேடியதிட்டம்,' 'பிரித்தானிய திட்டம்' என்ற எண்ணற்ற வடிவங்களில் ஏற்கனவே ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்து போகக் கூடாது. சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ இ. தொ. கா. தலைவர்களும் பாலா தம்பு உட்பட்ட சகல தொழிற்சங்க அதிகாரிகளும் இந்த திட்டங்களை நடைமுறைப் படுத்தி ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பூகோளரீதியான உற்பத்தி முறையையும் அடிமை உழைப்புச் சுரண்டலையும் ஊர்ஜிதம் செய்யும் நடவடிக்கைக்கு தோள் கொடுத்துள்ளனர். அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்துபோன தமிழ் தேசியவாத விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட்ட சகல முதலாளித்துவ அரசியல் அமைப்புக்களும் இணக்கம் தெரிவித்துள்ளது இந்த வேலைத் திட்டத்துக்கே.

யூ. என். பி. யினால் ஆரம்பிக்கப்பட்ட இனவாத யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களை அவர்களின் காணிநிலங்களில் இருந்து வெளியேற்றவும் படுகொலை செய்யவும் ஈடுபடுத்தப்பட்டுள்ள முதலாளித்துவ அரச படைகள் வடக்கு— கிழக்கில் இருந்து உடன் வாபஸ்பெறப்பட வேண்டும். இதற்காகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடர்ந்து பிரச்சாரம் செய்தது. இனவாத யுத்தத்தினைத் தமது வேலைத் திட்டமாக்கிக் கொண்ட யூ. என். பி — சி. ல. சு, க. மற்றும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்கு எதிராக சிங்கள— தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்தின் அடிப்படையிலான ஒரு சுயாதீன அரசியல் இயக்கத்தினை—இலங்கை—தமிழ் ஈழம் சோசலிச குடியரசின் முன் நோக்கின் அடிப்படையில் அணிதிரட்டுவது அந்தப் பிரச்சாரத்தின் அர்த்தமாக விளங்கியது.

சமசமாஜ— கம்யூனிச— நவசமசமாஜ— இ.தொ.கா. தலைவர்களும் சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் அந்த வேலைத்திட்டம் பொதுஜனங்களிடையே வேரூன்றுவதைத் தடுக்க முழு மூச்சாகச் தொழிற்பட்டனர். வடக்கு— கிழக்கில் இடம்பெற்று வந்த மக்கட் படுகொலை சம்பந்ததமாக இத்துரோகிகள் வாய் திறந்தால் அதனை அவர்கள்விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான நச்சுத்தனமான பிரச்சாரத்தின் ஊடாக சிங்கள இனவாதத்தினை பராமரிக்கவும், முதலாளித்துவ அரச படைகள் உட்பட்ட ஒடுக்குமுறை இயந்திரத்தினை கலைப்பதை இலக்காகக் கொண்ட வெகுஜன இயக்கம் கட்டியெழுப்பப்படுவதைத் தடைசெய்யவுமே நடாத்தினர். இது முதலாளித்துவ சி. ல. சு. க. தலைமையில் தமிழ் முதலாளித்துவ அமைப்புகளுடன் உருவாக்கிக் கொள்ளும் கூட்டின் மூலம் சிங்கள — தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை மிலேச்சமான முறையில் ஒடுக்கித் தள்ளும் பிற்போக்குத் திட்டத்தினை அமுல் செய்யவே வழிவகுத்தது.

## இத்தகைய கூட்டின் அவசியம் என்ன?

முதலாளி வர்க்கத்துக்கு இத்தகைய ஒரு கூட்டும் திட்டமும் அவசியப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உள:

1. இனவாத யுத்தத்துக்காகத் தூண்டிவிடப்பட்ட மத்தியதர வர்க்க, குட்டி முதலாளித்துவ தட்டினர் 11 வருட கால யுத்தத்தினால் சலித்துப் போனமை. யுத்தத்தினால் தமக்குப் புதிய வருமான வழிகள், சீவனோபாயங்கள் பலவும் கிடைக்கக் கூடியதாக இருந்ததால் இந்த சமூகத் தட்டினர் இனவாத சன்னியின் சவுக்கடிகாரர்களாக ஆரம்பத்தில் செயற்பட்டனர். தமிழ் தேசிய இனத்தினர் மனிதப் படுகொலைகள் மூலம் ஒழித்துக்கட்டப்படின் தமது வயிற்றுமாரி ஜீவனோபாயத்தினை குறைந்த பட்சப் போட்டியுடன் நடாத்திச் செல்ல முடியும் என இவர்கள் கணக்குப் போட்டனர். இந்தப் பிரிவினர் யூ. என். பி, சி.ல.சு.க, ம ஐ. மு. பின்னாலும் அவ்வாறேபாசிச ஜே. வி. பீ. யை சூழவும் தேசத்தினை மீட்பதன்பேரில் அணிதிரண்டனர். எனினும், யுத்தம் நீண்டு செல்கையில் அவர்களுக்குக் கிட்டியதுஎதிர் பார்த்த வாய்ப்புக்கள் அல்ல; மிக மோசமான பொருளாதார சுமைகளும், அடக்கு முறைகளும், சவப்பெட்டி

( 10ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ. ஆர். ஏ. போர் நிறுத்தத்தின் பின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரான ஜக்குவாஸ் டிலோர்ஸ் சமாதான போக்குக்கு உதவ அதிக அளவிலான EU பணம் வழங்கப்படும் என உடனடியாகக் குறிப்பிட்டதையும் குறிப்பிடாமல் விட முடியாது.

## முதலாளித்துவ தேசியவாதத்தின் வங்குரோத்து

பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கான ஐ. ஆர். ஏ யின் அடிபணிவு, ஒராண்டின் முன்னர் வெள்ளை மாளிகை பசும்புற் தரையில் இஸ்ரேலியப் பிரதமர் யிசாக் றாபினுடன் யசீர் அரபாத் கை குலுக்கியதன் மூலமும், தென் ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவும் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் ஆட்சிப் பீடம் ஏறியதன் மூலமும் முன்னெடுக்கப்பட்ட நன்கு நெய்யப்பட்ட பாதையில் தொடர்கின்றது. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய சுதந்திர முதலாளித்துவ தேசிய அரசுகளை சிருஷ்டிக்கும் அவர்களின் வேலைத்திட்டத்தினை முற்றிலும் வங்குரோத்தானதாக்கி உள்ளது.

இந்த மாற்றம் ஐ.ஆர்.ஏ. யின் முழு வரலாற்றில் இருந்தும் வர்க்கப் பண்பில் இருந்தும் பெருக்கெடுக்கின்றது. மத்தியதர வர்க்க தீவிரவாதிகளதும் ஸ்டாலினிஸ்டுகளதும் செல்வாக்கின் கீழ் பல்வேறு கட்டங்களிலும் இது சோசலிச ஆடையினால் அலங்கரிக்கப்பட்டுள்ளபோதிலும் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசாமலே ஒரு ஐக்கிய முதலாளித்துவ அயர்லாந்தை சிருஷ்டிப்பதே அவர்களின் இலக்காகக் கூறப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் பெரிதும் அடிப்படையான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமலே அயர்லாந்து விடுதலையை அடைய முடியும் என்ற நப்பாசையை ஐ. ஆர். ஏ. வளர்த்து வந்தது.

அதன் ஆரம்பத்தில் இருந்தே—இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே அயர்லாந்து முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினரைப் பிரதிநிதித்துவம் செய்த ஐ. ஆர். ஏ. முதலாளித்துவ ட. புரட்சியின் ஜனநாயகப் பணியை அமுல் செய்வதற்கும், அயர்லாந்தை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை செய்யவும் என்றுமே இலாயக்கற்றதாக இருந்து வந்தது, இன்றைய அவதாரத்தில் ஐ. ஆர். ஏ. 1969 கிளர்ச்சியின் பிரதிபலிப்பால் தோன்றியது. அப்போது தொழிலாளர் வர்க்கம் தொழிற்கட்சியினாலும் தொழிற் சங்கங்களாலும் கைவிடப்பட்டிருந்தது. சோசலிசத்துக்கு எதிரான கத்தோலிக்க குட்டி முதலாளித்துவ தட்டினரைப் பிரதிநிதித்துவம் செய்த அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தினை சுயாதீனமான முறையில் அணிதிரட்டுவதை எதிர்த்து ஒடுக்குமுறைக்கு எதிரான வெறுப்பையும். பாகுபாடுகளையும் ஒரு தேசியவாத குறுங்குழு திசையில் நெறிப்படுத்தினர். ஒரு ஐக்கிய ஐரிஷ் அரசின் நிர்மாணம் தொழிலாளர் வர்க்கத்தினைச் சுரண்டுவதில் தாமும் இணைந்து கொள்வதற்கான சாதனமாக நோக்கப்பட்டது. அவர்களின் ''ஆயுதப் போராட்டம்'' தம்மை கனிஷ்ட பங்காளிகளாக ஏகாதிபத்தியத்தினை ஏற்க நெருக்கும் ஒரு சாதனமேயன்றி வேறொன்றும் அல்ல. ஏகாதிபத்திய அரசாங்கங்களுடனும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத் தாபனங்களுடனும் ஒரு நேரடி உறவை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இதனை அடையும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதை இவர்கள் இப்போது காண்கிறார்கள்.

கத்தோலிக்க குட்டிமுதலாளித்துவத்தின் பகுதியினர்கலவரங்கள் மூலம் தம்மை பணக்காரராக்கிக் கொண்டதோடு பெருகி வரும் ஐ. ஆர். ஏ.யின் செல்வத்துக்கும் பங்களிப்புச் செய்தனர். சின்பின் ஐரிஷ் — அமெரிக்கன் வர்த்தக சமூகத்துடன் ஏற்கனவே பலமான உறவுகள் கொண்டுள்ளது. ஐ. ஆர். ஏ. தற்போது ''நரைத்த பொருளாதாரத்தில்'' இருந்து 10 மில்லியன் ஸ்டேர்லிங்உழைத்துள்ளதாகப் புகழ்பெற்றுள்ளதோடு, இது இதனை முதலாளித்துவ நிறுவனங்களில் மறு முதலீடு செய்கின்றது. அரசாங்கத்திலும் கைத்தொழிலிலும் பதவிகள் வகிப்பதன் மூலம் இவாகள் இந்த சுயநலன்களை விருத்திசெய்ய இப்போது முயற்சிக்கின்றனர். இங்கு அவர்கள் அமெரிக்காவில் இருந்தும் ஐரோப்பாவில் இருந்தும் வரும் புதிய மூலதனப் பாய்ச்சலை நிர்வகிப்பர்.

## ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம், மத்திய வர்க்க தீவிரவாதம்

ஒவ்வொரு முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களதும் வீழ்ச்சியும் ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியை தொடர்கின்றது. இவ்விரண்டுக்கும் இடையே ஆழமான உறவு உண்டு. இவை இரண்டும் தேசிய ஏகபோகங்கள், சுயபூர்த்தி கொள்கைகளின் மேல் பூகோளமயமாக்கம் கொணர்ந்த தாக்கங்களின் பெறு பேறுகளாகும்.

மேலும் தேசியவாத இயக்கங்கள் தொழிலாளர் வர்க்க இயக்கங்களை மேலாதிக்கம் செய்வதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை நடாத்துபவர்களாக தம்மைக்காட்டிக் கொள்ளும் வல்லமையும் ஸ்டாலினிசமும், சமூக ஜனநாயகமும் தொழிலாளர் வர்க்கத்தினை சித்தாந்த ரீதியில் நிராயுதபாணியாக்குவதிலேயே தங்கியிருந்தது.

இது கடந்த 70 ஆண்டுகளாக முதலாளித்துவ தேசியவாதம் அயர்லாந்து தொழிலாளர் வர்க்கத்தினை மேலாதிக்கம் செய்வதை சாத்தியமாக்கியது. இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் —லெனின், ட்ரொட்ஸ்கியைத் தவிர—1916 ஈஸ்டர் கிளர்ச்சியை ஆதரிக்க மறுத்தனர். 1917 அக்டோபர் போல்ஷிவிக் புரட்சியின் பின்னர் அயர்லாந்தில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இதன் அபிவிருத்தி மூன்றாம் அகிலத்துள் வளர்ச்சி கண்ட ஸ்டாலினிசத்தினால் சிரச்சேதம் செய்யப்பட்டுவிட்டது. ஸ்டாலினிசம் அயர்லாந்தில் தொழிலாளர் வர்க்கத்தினை தொழிற்சங்க சின்டிக்கல்வாதம், முதலாளித்துவ தேசியவாத கூட்டுக்கு கீழ்ப்படிய வைத்ததோடு ஒரு சுயாதீன மான வர்க்க முன்னோக்கினை அபிவிருத்தி செய்வதையும் தடுத்தது.

இது பிரித்தானிய தொழிலாளர் கட்சியின் துரோகப் பாத்திரத்துடன் கூட்டுச் சேர்ந்தது. ஈஸ்டர் கிளர்ச்சியை இரத்தம் தோய்ந்த முறையில் நசுக்கிய அமைச்சரவையில் தொழிற்கட்சியினர் அமர்ந்த 1916ல் இருந்து யூனியன்வாதத்தினை தூண்டிவிட படைகளை வட அயர்லாந்தினுள் அனுப்பிய 1969ன் தொழிற்கட்சி அரசாங்கம் வரை — இந்நூற்றாண்டு பூராவும் அயர்லாந்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினை இது ஆதரித்தது.

1969ல் கத்தோலிக்கப் பகுதியில் இருந்த தொழிலாளர் வர்க்கம் யூனியன்வாத சேரிகளுக்கு எதிராகக் கிளர்ச்சியில் இறங்கிய போது றிபப்ளிக்கன்வாதம் ஒரு செல்வாக்கிழந்த சக்தியாக இருந்தது. ஸ்டாலினிஸ்டுகளும் மத்தியதர வர்க்கத் தீவிரவாதிகளும் இதனைபுத்துயிர் பெறச் செய்து இதன் ஜீவிய குத்தகையை புதுப்பித்தனர். ஐ.ஆர்.ஏ.யின் 'ஆயுதப் போராட்ட' பயங்கரவாத இயக்கத்தினை மகத்தானதாகக் காட்டி அதனுடன் சேர்ந்தனர். முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் கியூபாவிலும் நிகரகுவாவிலும் ஈட்டிய வெற்றியைச் சுட்டிக்காட்டி, அவற்றையும் பி. எல். ஓ. ஆ. தே. கா.வுக்கு உரிய அகழியில் வைத்தனர்.

இந்தச் சகல இயக்கங்களதும் முன்நோக்கும் இந்தப் பனிப்போர் காலத்தில் ஏகாதிபத்தியத்துக்கும் ஸ்டாலினிசத்துக்கும் இடையேயான மோதல்களை தமது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்துவதாக விளங்கியது. இவர்களும், ஸ்டாலினிஸ்டுகளும் தொழிலாளர்களின் சுயாதீனமான எந்தவொரு ஆரம்பிப்பினையும் நசுக்க இணைந்து செயற்பட்டுள்ளனர். ஸ்டாலினிஸ்டுகள் தேசிய விடுதலை இயக்கங்களை ஏகாதிபத்தியத்துடனான கொடுக்கல் வாங்கல்களில் ஒரு பேரம் பேசும் 'கவுன்டராக' பயன்படுத்தும் பொருட்டு அவற்றுக்கு வரையறுக்கப்பட்ட உதவியை வழங்கினர்.

ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி சகல தேசிய விடுதலை இயக்கங்களையும் வலதுசாரி திசைக்கு—நேரடியாக ஏகாதிபத்திய முகாமினுள் தள்ளியது. ஐ. ஆர். ஏ.யின் அடிபணிவானது அத்தகைய ஒரு தலைமையின் கீழ் அயர்லாந்து தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்தியத்திடமிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ள முடியும் என்ற கனவைச் சிதறுண்டு போகச்செய்துள்ளது. றிபப்ளிக்கள் இயக்கத்தினை ஒரு சோசலிசமாகவும் அயர்லாந்து தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே நியாயமான பிரதிநிதியாகவும் காட்டி வந்த மத்தியதர வர்க்கக் தீவிரவாதிகள், தொழிற்கட்சி 'இடதுசாரிகள்' அனைவரையும் இது அம்பலப்படுத்தியுள்ளது. அயர்லாந்து தொழிலாளர்களை தேசியவாதத்துடன் பிணைப்பதும் அவர்கள் ஒரு புரட்சிகர சோசலிச வேலைத் திட்டம் பக்கம் திரும்புவதை தடை செய்வதும் அவர்களின் பாத்திரமாக இருந்தது.

## தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் பணிகள்

''ஆயுதப் போராட்டத்தின்'' முடிவு சமாதான அபிவிருத்திக்கும் செழிப்பின் வளர்ச்சிக்குமான ஒரு காலப் பகுதிக்குக் கதவுகளைத் திறந்து விடாது. இந்த ஏகாதிபத்தியச் சக்திகளும் அயர்லாந்தின் முதலாளி வர்க்கமும் வர்க்கத்துக்கான ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்து கொண்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனியில் இடம் பெற்றதை ஒத்த கைத்தொழில், சமூக பேரழிவுகளின் ஒரு போக்குத் தயார் செய்யப்பட்டு வருகின்றது. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து தொழிலாளர்கள் தமது தொழில், சம்பளங்கள், சமூக நிலைமைகளின் மேல் ஒரேபாணியிலான ஒரு முறை முறையான தாக்குதலைக் காண்பர். வடக்கில் 'தங்கிவாழும் கலாச்சாரத்திற்கு முடிவுகட்டுதல்' என்பதன் அர்த்தம், புரட்டஸ்தாந்து தொழிலாளர்களுக்கும், கைத்தொழில்கள் மறுசீரமைக்கப்பட்டு நலன்புரி நடவடிக்கைகள் ஒழிக்கப்பட்டதால் அரச செலவில் தங்கியுள்ள மத்தியதர வர்க்கத்தினரின் பெரும் பகுதியினருக்கும் எஞ்சியுள்ள சலுகைகளை அழிப்பதாகும்.

டப்ளினுக்கும் பெல்பாஸ்டுக்கும் இடையேயான ஒரு 100 மைல் வியாபார நடைபாதை பற்றி நிதியியல் பத்திரிகைகளில் ஏற்கனவே சுலந்துரையாடப்பட்டு வருகின்றது. சகல முதலீடுகளும் இந்த கிழக்குக் கடற்கரை ஓரமாகவே குவிக்கப்படும். பிரித்தானிய, ஐரோப்பியச் சந்தைகளுடனான இதனது நெருங்கிய தொடர்புகளால் இது ஏனைய பகுதிகளது—வடக்கு, தெற்கு—பொருளாதார அபிவிருத்தியை மேலும் பாதிக்கும். உலகின் பல பாகங்களில் சுதந்திர வர்த்தகவலயங்களின் அபிவிருத்தியில் கண்டது போல் இது அதிகரித்த வறுமைக்கும் அயர்லாந்து புதிய பொருளாதார துண்டுகளாக்கப்படுவதற்கும் இட்டுச் செல்லும்.

அயர்லாந்து தொழிலாளர் வர்க்கத்தின் மேல் திணிக்கப்பட்டுள்ள நிலைமைகள் ஐரோப்பாவுக்கான ஒரு புதிய அளவை மட்டக் குறியை ஏற்படுத்தும், இது பிரித்தானியத் தொழிலாளர் வர்க்கத்தின் மேல் பேரழிவு தாக்கத்துடன் கூடிய பொருளாதார, சமூக கிளர்ச்சியை உண்டுபண்ணும். பிரித்தானிய, அயர்லாந்து தொழிலாளர் வர்க்கத்தின் தலைவிதி என்றும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டது. அது இன்றுபோல் என்றும் உண்மையாய் இருந்தது இல்லை, கடந்த 25 ஆண்டுகளாக ஐரிஷ் பிரித்தானிய தொழிலாளர் வர்க்கம் சந்தர்ப்பவாத தொழிற்கட்சித் தலைவர்களால் பிரித்துவைக்கப்பட்டது. இவர்கள் ஐரிஷ் விரோத சோவினிசத்தினை தூண்டிவிட்டதோடு தொழிலாளர் வர்க்க இலக்குகள் மீது ஐ. ஆர்.ஏ.யினால் தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இதனை இனி வெற்றி கொள் முடியும்.

இந்த நூற்றாண்டின் கசப்பான படிப்பினைகள் கற்கப்பட்டு, ஏகாதிபத்தியத்தினால் பயிரிடப்பட்ட குறுங்குழு பிளவுகள் நிராகரிக்கப்படின் இந்த மட்டமிடும் போக்கானது கத்தோலிக, புரட்டஸ்தாந்து தொழிலாளர்கள் இருவரும் பிரித்தானியத் தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுவதற்கான புறநிலை நிலைமைகளை உருவாக்கும்.

தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒரே வேலைத் திட்டம்— முதலாளித்துவத்தை தூக்கி வீசி, ஐக்கிய ஐரோப்பிய சோசலிஸ்ட் அரசுகளதும் ஒரு உலக சோசலிஸ்ட் சமஷ்டியினதும் ஒரு பாகமாக அயர்லாந்திலும் பிரித்தானியாவிலும் தொழிலாளர் அரசாங்கங்களை அமைப்பது —நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வேலைத்திட்டமே. இந்த அடிப்படையில் மட்டுமே ஐரிஷ் தொழிலாளர்கள் ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான தமது அவாவினை அடைய முடியும். இது பிரித்தானியாவில் இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சியை (1CP) கட்டியெழுப்புவதையும், நா.அ.அ. கு.வின் ஒரு பகுதியினை அமைப்பதன் ஊடாக அயர்லாந்தில் புதிய புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்புவதையும் வேண்டி நிற்கின்றது.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் :.................................................

முகவரி:.................................................

.................................................

.................................................

தொலைபேசி இலக்கம்: ..............................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கிராமங்களுக்கு வந்தடைவதுமே. அலுகோசு வேலைக்கென இராணுவத்தில் சேர்ந்தவர்கள்— சாதாரண படையாட்கள் மட்டுமன்றி அதிகாரிகளும் கூட இராணுவத்தை விட்டு ஓட்டம் பிடிப்பது ஒருமாதத்துக்கு பல்லாயிரமாக உயர்ந்து கொண்டு வந்தது. இது இந்தச் சமூகத் தட்டினரிடையே வளர்ச்சி கண்ட அவஸ்தை நிலையையும் யுத்த சலிப்பையும் சுட்டிக்காட்டியது. யுத்தத்தினைத் தொடர்ந்து முன்னெடுக்கும் சுலோகத்தின் கீழ் தேர்தலுக்கு நின்ற யூ. என். பிக்கும் எம் ஈ.பி.க்கும் கிடைத்த தேர்தல் தோல்வி எல்லாவற்றுக்கும் மேலாக இந்த யுத்த சலிப்பை வெளிக்காட்டியது.

இனவாதத்தினால் தூண்டப்பட்ட இந்த இனவாத அடிப்படை ஆட்டம் கண்டு போனமை முதலாளித்துவ ஆட்சிக்கும் அரசுக்கும் பெரும் ஆபத்தை உண்டுபண்ணியது. இராணுவத் தளபதிகளும் அந்த ஆபத்தினைப் புரிந்து கொண்டிருந்ததாக தெரிய வந்தது. பொதுத் தேர்தலின் பின்னர் சிறுபான்மை யூ என். பி. அரசாங்கம் அமைக்கப் படுமானால் அதை பாதுகாக்க முடியுமா என ஆகஸ்ட் 18ம் திகதி ஜனாதிபதி விஜேதுங்க அவர்களிடம் விசாரித்தார். அதைச் செய்ய முடியாது என இராணுவ - பொலிஸ் அதிபர்கள் கூறியதன் மூலம் இது அம்பலமாகியது. வடக்கில் இனவாத யுத்தத்தினை நடாத்தி வரும் அதே வேளையில்— அங்கு தோல்விகளுக்கு முகம் கொடுக்கையில் தெற்கில் எழுச்சி காணும் கிளர்ச்சிகளை நசுக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இராணுவத் தளபதிகளுக்கும் பெரும் புத்திக் கூர்மை அவசியம் இல்லை. அத்தகைய ஒரு நிலைமையிலேயே பொதுஜன முன்னணியிடம் அரசாங்கத்தை ஒப்படைக்கவும், பொதுஜன முன்னணியைப் பயன்படுத்தி வடக்கில் ஒரு கூட்டினை உருவாக்குவதன் மூலம் தெற்கில் மக்கள் மீது முதலாளித்துவ அரசின் ஆளுமையை மீண்டும் நிறுவவும் ஆளும் வர்க்கம் தீர்மானம் செய்தது.

2. தொழிலாளர் வர்க்கத்தின் பல்வேறு பகுதியினரும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வர்க்க நடவடிக்கைகளுக்கு கிளம்பியமை. ஒரு இலட்சம் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தும், தொழிலாளர்களுக்குஎதிராக குண்டர் தாக்குதல் நடாத்தியும், தொழிற்சங்க அலுவலகங்களுக்கு 'சீல்' வைத்தும் 1980களில் இருந்து யூ.என்.பி அரசாங்கம் தீவிரமாக்கிய ஒடுக்குமுறையை சிதறடிக்கும் வகையில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும், சட்டப்படி வேலை செய்யும் இயக்கமும், மறியல்களும் பரவின. 1993 கடைப்பகுதி தொடக்கம் வளர்ச்சி கண்ட இந்த போராட்டங்களின் எதிரில் பலவீனம் கண்ட விஜேதுங்க ஆட்சி 1994 மே தினத்தில் ''சலுகை பொட்டலம்'' வழங்கும் மோசடி மூலம் தொழிலாளர்களின் கண்களில் மண்போட எடுத்த முயற்சியும் பயனளிக்கவில்லை. தோட்டத்துறையிலும், நகர்ப்புற கைத்தொழில் பிராந்தியங்களில் மட்டுமன்றி சுதந்திர வர்த்தக வலயங்களிலும் தொழிலாளர்கள் தமது அமைப்புக்களை கட்டி எழுப்பி போராட்டங்களுக்கு கிளர்ந்தனர். ஏழு மாதங்களுக்கு முன்னரே பொதுத் தேர்தலை நடாத்த முடிவு செய்ததும் கூட இந்தப் போராட்டத்தினை ஸ்தம்பிக்கச் செய்யவேயாகும். ஆனால் அதைச் சாதிக்க முடியாது போயிற்று. தேர்தல் காலத்தினைப் போலவே அதன் பின்னரும் தொழிலாளர்கள் தமது போராட்டத்தை கைவிடாதிருக்க முடிவு செய்தனர்.

இந்தத் தொழிலாளர் போராட்டங்கள் ஆளும் வர்க்கத்தின் எதிரில் தோற்றுவித்த அரசியல் ஆபத்து பெரிதும் உக்கிரமானதற்குக் காரணம், முதலாளி வர்க்கத்துக்கு முண்டு கொடுத்து வந்த மத்தியதர வர்க்க, குட்டி முதலாளித்துவ சமூக தட்டினரது ஆதரவினை அது ஈர்த்துக் கொள்ளுமோ எனத் தோன்றியதுமேயாகும். வேலைத்தலக் கோரிக்கைகளின் பேரிலான போராட்டங்களை அரசியல் முன்நோக்கு இல்லாத தொழிலாளர் போராட்டங்களாக மாற்றுவதற்கு முதலாளித்துவச் சார்பு சகல அதிகாரத்துவங்களும் தொழிற்பட்டன. ஆனால்அதிகாரத்துவங்களின் ஆளுமை தகர்ந்து போன நிலைமையின் கீழ் அதில் தொங்கித் தமது ஆடசியின் பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை ஆளும் வர்க்கம் பெரிதும் புரிந்து கொண்டு வருகின்றது.

குட்டி முதலாளித்துவ சமூகத் தட்டினரது பண்புகளுக்கும் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களுக்கும் இடையே இருந்துவரும் உறவுகளை ட்ரொட்ஸ்கி பின்வருமாறு விபரித்தார்: ''முதலாளித்துவத்தின் எழுச்சியினதும், வளர்ச்சியினதும் மலர்ச்சியினதும் சகாப்தத்திலும் குட்டி முதலாளித்துவம் தனது கடுமையான அதிருப்தியின் வெடிப்புக்களுக்கிடையேயும் பொதுவில் முதலாளித்துவ கவசத்துடன் கீழ்ப்படிவுடன் பயணம் செய்தது, அதனால்செய்யக் கூடியது வேறெதுவும் இருக்கவில்லை. ஆனால் முதலாளித்துவத்தின் வெடிப்பினதும் பொருளாதார முட்டுச் சந்து நிலைமையின் கீழ் குட்டி முதலாளித்துவம் பழைய ஏஜமானர்களதும் சமூக ஆட்சியாளர்களதும் விலங்குகளில் இருந்து விடுபட்டுச் செல்ல முயற்சிக்கின்றது; இலக்காகக் கொள்கின்றது. அது அதனது தலைவிதியை பாட்டாளி வர்க்கத்தின் தலைவிதியுடன் இணைத்துக் கொள்ளப் பெரிதும் திறமை வாய்ந்தது. அதற்கு ஒன்று மட்டுமே அவசியப்படுகின்றது. பாட்டாளி வர்க்கம் ஒரு புதிய பாதையில் சமுதாயத்தை இட்டுச் செல்லும் அதன் சக்தியில் குட்டி முதலாளித்துவத்துக்கு நம்பிக்கை பிறக்க வேண்டும். தொழிலாளர் வர்க்கம் இந்த நம்பிக்கையை அதன் பலத்தினாலும், அதன் நடவடிக்கைகளின் உறுதியினாலும், எதிரிக்கு எதிரான ஒரு திறமை வாய்ந்த எதிர்த்தாக்குதலினாலும் அதன் புரட்சிகரக் கொள்கையின் வெற்றியினாலுமே பிறக்கச் செய்ய முடியும்'' (ஜேர்மனி— 1931—32 பக்கம் 234)

தொழிலாளர் வர்க்கம்தொடர்பாக குட்டி முதலாளித்துவ தட்டினரிடையே நம்பிக்கை வளர்ச்சி காண்பதற்கு முன்னரே சிறப்பாக துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பை புரிந்து கொண்டு தொழிலாளர் வர்க்கத்தினை புரட்சிகர வேலைத்திட்டத்தின் மேல் ஸ்தாபிதம் செய்வதற்கு முன்னரே தொழிலாளர் வர்க்கத்தினை நசுக்கித் தள்ள இராணுவ, பொலிஸ் படைப் பிரிவுகளை வழிநடாத்த ஆளும் வர்க்கம் முடிவு செய்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்புடனும் மற்றும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடனும் கூட்டினை ஏற்படுத்துவதன் மூலம் வடக்கில் இருந்து இராணுவத்தை தருவிக்க முயற்சிப்பதற்கு அதுவே காரணம்.

இந்தப் பிற்போக்குத் திட்டங்களை வெற்றிபெறச் செய்யும் பொருட்டு சம சமாஜ-கம்யூனிஸ்ட்— நவ சமசமாஜ தலைவர்களை அரவணைத்துக்கொண்டு சந்திரிகா குமாரதுங்க இன்று கூறுவது என்ன? பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகத் தோன்றும் தொழிலாளர் போராட்டங்களை ''வடக்கு'' பிரச்சினையை தீர்த்துவைக்கும்முயற்சியை'' சிதறடிக்கும்நடவடிக்கை என்கின்றார். யுத்தத்தினால் அதிர்ந்து போயுள்ள குட்டி முதலாளித்துவ, மத்தியதர வர்க்கங்களை மீண்டும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராகத் தூண்டிவிடும் திசையில் இப்பேச்சு திருப்பப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிலாளர் போராட்டங்களினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திரும்பிச் செல்கின்றார்கள் எனவும் அது 'தேசியப் பொருளாதாரத்தை ஸ்தம்பிக்க வைப்பதாகும்' எனவும் இதனுடன் சேர்ந்து பொதுஜன முன்னணி தலைவர்கள் கூச்சலிடுகிறார்கள். பூகோளமயமான உற்பத்தி நடைமுறையில் ஈடுபட்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு கதவுகளைத் திறந்துவிட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையானது தேசியப் பொருளாதாரத்துக்கு சாவு மணி அடித்துள்ளது; அதன் மூலம் இந்நாட்டுத் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை அடிமை உழைப்பாளிகள் ஆக்கியுள்ளது. இதுவே உண்மை நிலை. தெற்கிலும் அவ்வாறே வடக்கிலும் இந்த அடிமை உழைப்பு வலயங்களை அமைப்பதற்கு அவசியமான பரந்த ஒடுக்குமுறையினை சிங்கள— தமிழ் ஆளும் வர்க்கங்களுக்கு இடையேயான வேலைப்பகுப்பின் மூலம் இட்டு நிரப்புவதே பொதுஜன முன்னணியின் ''வடக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணும்'' திட்டத்தின் அர்த்தமாகும்.

## பாசிச படையணிகள்

இனவாத யுத்தத்தினால் சலித்து போயுள்ள மத்தியதர வர்க்க, குட்டி முதலாளித்துவபிரிவினரை அணிதிரட்டி, பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பேரில் செய்து வரும் இராணுவ-பொலிஸ் அரச திட்டம் தோல்வி காணுமிடத்து அதற்குப் பதிலாக கதிகலங்கிப் போயுள்ள இந்த சமூகத் தட்டினரைப் பயன்படுத்தி திரும்பவும் இனவாத பாசிச படையணிகளை வீதியில் இறக்கும் இலக்கினையும் ஆளும் வர்க்கம் கைவிட்டுவிடவில்லை. கூட்டுத் தகர்ந்து போனதற்கான முழுத் தவறையும் தமிழ் மக்களின் தலைகளில் கட்டியடிக்கவும், அவர்களுக்கு எதிராக விஷமத்தனமான பிரச்சாரத்தில் குதிக்கவும் வேண்டிய அவகாசம் பற்றியும் அவர்கள் நிச்சயம் கணக்குப் பார்த்துக் கொண்டுள்ளனர். இதன்பொருட்டு பாசிச ஜே. வீ. பி. ஏற்கனவே தொழிற்பட்டு வருகின்றது. அந்நிலைமையின் கீழ் ஏகாதிபத்திய வல்லரசுகளதும் பக்கபலத்துடன் வடக்கில் தனியான ஒருஅரசினைத் திணிக்கும்பிற்போக்கு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தெற்கின் ஆட்சியாளர்களுக்கு உதவியாக தொழிற்பட விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட்ட தமிழ் முதலாளித்துவ கட்சிகள் முன்வரவும் இடமுண்டு. இவை எல்லாம் உலக யுத்தத்துக்கும் காலனித்துவ வேலைத் திட்டத்திற்கும் அப்பட்டமாக பாய்ந்து கொள்ள அணிதிரண்டு வரும் ஏகாதிபத்திய திட்டத்தின் உள்ளேயே அடங்கியுள்ளது.

## தீர்க்கமான அவசியம்

இந்த ஆபத்தான அரசியல் நிலைமையில் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களின் தீர்க்கமான அவசியம், அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படையில் சுயாதீனமான முறையில் அணிதிரள்வதாகும் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இந்திய துணைக் கண்ட சோசலிசகுடியரசு ஒன்றியத்தினை கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு சகலதொழிலாளர்கள், ஏழைவிவசாயிகள், இளைஞர்கள் வீட்டுப் பெண்கள், மாணவர்களையும் அணி திரட்ட வேண்டும். அந்த முன்நோக்கின் கீழேயே முதலாளித்துவ ஆட்சி முறையைத் தூக்கிவீசி இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை கட்டி எழுப்ப முடியும். தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வது சிங்கள அல்லது தமிழ் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கீழ் இடம்பெற முடியாது, அதற்கு சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் ஏழைகளை தம்மைச் சூழ அணிதிரட்டுவதன் மூலம் முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசி சோசலிச வேலைத்திட்டத்துக்கு அர்ப்பணம் பூண்ட தொழிலாளர்— விவசாயிகளின் சோவியத் சபைகளின் அடிப்படையிலான சோவியத்துகளை நிறுவ வேண்டும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிற்போக்கு திட்டத்துக்குத் தோள் கொடுத்துள்ள சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களைப் போலவே அதற்கு சுற்றிவழைத்து ஆதரவு வழங்கிக் கொண்டு, அதையிட்டு நப்பாசைகளை விதைத்துவரும் நவசமசமாஜ இ. தொ. கா, தொழிற்சங்கத் தலைவர்களையும் வெளியேற்றி தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகவாத புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்பும் பிரமாண்டமான அவசியம் இன்று உருவாகியுள்ளது. இராணுவ— பொலிஸ் அரச திட்டங்களையும் பாசிச அச்சுறுத்தல்களையும் தோற்கடிக்கும் பொருட்டு மேற்சொன்ன வேலைத்திட்டத்தினை முன்வைத்துப் போராடுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. அதன் வேலைத் திட்டத்தினை ஆய்வு செய்து, அதில் இணைந்து கொள்ளும்படி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் அனைத்து முற்னேற்றமான பகுதியினரையும் நாம் அழைக்கின்றோம்.

வாசியுங்கள்!

**சோவியத் யூனியன் எங்கே செல்கின்றது?**

தொடர்புகளுக்கு:-
ஆனந்த வக்கும்புற,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு—10.

விலை ரூபா. 25.00

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்த ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51-ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org